விலை: 50.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com




சங்கு 23
ஒலி 177 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 31 செவ்வாய்க்கிழமை (14.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## இலங்கையின் எதிர்காலத்துக்காக
# புலம்பெயர் சமூகத்துடன் இணைந்து செயற்படத் தயார்

### ஜெனிவாவில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்



(ஜெனிவா)

புலம்பெயர் சமூகத்துடனும் எமது நாட்டின் நல்வாழ்வுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் சிவில் சமூக அமைப்புக்களுடனும் இணைந்து செயற்பட இலங்கை திறந்த நிலையில் உள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## நெல்லியடியில்
# அட்டை முறையில் எரிபொருள் விநியோகம்



(கரணவாய்)

நெல்லியடி எரிபொருள் நிலையத்தில் பெற்றோல் அட்டைக்கே எரிபொருள் வழங்கப்படுவதாக கட்டைவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது

15

## மாசியப்பிட்டியில்
# தீக்காயத்துக்குள்ளான மூதாட்டி மரணம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாசியப்பிட்டியில் தீக்காயத்துக்குள்ளான மூதாட்டி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த

15

# ராஜபக்ஷக்களின் அரசியலுக்கு முற்றுப்புள்ளியே இல்லை
### நாமல் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

"ராஜபக்ஷக்கள் தத்தமது சுயவிருப்பத்தின் பிரகாரம் பதவிகளிலிருந்து விலகலாம். ஆனால், அவர்களின் அரசியலுக்கு ஒருபோதும் முற்றுப்புள்ளி வைக்க முடியாது" என்று முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

15

## நெருக்கடியில் உள்ள இலங்கைக்கு
# சீனா – அமெரிக்கா இணைந்து உதவலாம்
### இரு நாட்டுத் தூதுவர்களும் கலந்துரையாடல்




(கொழும்பு)

கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வரும் இலங்கைக்கு சீனாவும் அமெரிக்காவும் இணைந்து உதவுவது தொடர்பில் இருநாட்டு தூதுவர்களும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் சென்ஹொங் மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்குமிடையிலான சந்திப்பு கொழும்

15

## அதிக விலைக்கு அரிசி விற்பனை
# மன்னாரில் வியாபாரிகள் மீது வழக்குப் பதிவு



(மன்னார்)

மன்னார் நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட

15

# மின்சார சபை தலைவர்
### பதவி விலகினார்



15

# இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதை உறுதி செய்க
### ஐ.நா ஆணையாளர் மிச்செல் பச்லெட்



(ஜெனிவா)

இலங்கையில் பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ள மக்களிற்கான நிவாரணத்தை உறுதி செய்ய வேண்டும். மீள்எழுச்சி திட்டங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகளின்போது சமூகப் பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்செல் பச்லெட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மனித உரிமை

15

# 21ஆவது சட்டமூலம் மீண்டும் அமைச்சரவையில்
### பொது இணக்கமும் எட்டப்பட்டுள்ளது

(கொழும்பு)

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பான சட்டமூலம் மீண்டும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டவரைபு தொடர்பான பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் அனைத்து தரப்பினருக்கும்இடையில் பொது இணக்

16

## இலங்கையின் பொருளாதாரத்தை மீட்க
# அமெரிக்கா ஆதரவளிக்கும்
### அமெரிக்க இராஜாங்க செயலாளர் பிரதமர் ரணிலிடம் உறுதி



(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரத்தை மீட்க அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் என அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் பிரதமர் ரணிலிடம்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் உற்பத்தியினை இரட்டிப்பாக்கும் திட்டத்தில்

## அமெரிக்கா – இலங்கை கைச்சாத்து



(கொழும்பு)

அமெரிக்க விவசாய திணைக் களத்தின் "முன்னேற்றத்திற் கான உணவு" முயற்சியில் பங்கு பெறும் இலங்கைப் பால் பண் ணையாளர்களின் பால் உற் பத்தியை இரட்டிப்பாக்குவதை நோக்கமாகக் கொண்ட புரிந்து ணர்வு ஒப்பந்தத்தில் இலங்கை யின் விவசாயத் திணைக்களம் கைச்சாத்திட்டுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கைக் கான அமெரிக்கத் தூது வர் ஜுலி சங் கலந்து கொண்டார். இலங்கை அரசாங்கத்துடன் நெருங் கிய பங்காளித்துவத் துடன் இந்தத் திட்டம் 2017 இன் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

ஏற்கனவே 25 ஆயி ரம் இலங்கை பால் பண் ணையாளர்கள் பயன டைந்துள்ளதுடன் அவர்களின் பால் உற்பத்தி இன்று வரை சராசரியாக 68 சதவீதத் தால் அதிகரித்துள்ளது.

இலங்கையின் உணவுப் பாது காப்பு மற்றும் பொருளாதார வளர்ச் சிக்கு ஆதரவளிப்பதற்கான அமெ ரிக்காவின் தொடர்ச்சியான முயற் சிகளின் ஒரு பகுதியாக, 80 ஆயிரம் இலங் கையர்கள் இந்தத் திட்டத் தின் மூலம் இறு தியில் உதவி களைப் பெறு வார்கள் என மதிப்பிடப்பட்டு ள்ளது.

கோவிட் தொற்று உட்பட எதிர்பாராத தாம தங்களுக்குப் பிறகு, அமெ ரிக்க தூதரகம் மற்றும் இலங் கை விவசாயத் திணைக்களம் இந்த கூட்டு ஒப் பந்தத்தை நேற்று இறுதி செய் தன. (ம-7)


## காணி தேவை

இரணைமடு நீர்ப்பாசனத்திற்குட்பட்ட
உறுதிக்காணி (வயல்) மற்றும்
யாழ்./கிளி. மாவட்டதில் நகர்ப் பகுதியை
அண்மித்த குடியிருப்புக்கான
காணி விற்பனைக்கு இருந்தால்
தொடர்பு கொள்ளவும்.
(தரகர் தேவையில்லை)
(11870)
Viber / Whatsapp
077 330 1798
077 414 5144


# கடவுச்சீட்டு வழங்குவதில் இனி புதிய நடைமுறை

(கொழும்பு)

இலங்கையில் ஒரு நாள் சேவையின் கீழ் நாளாந்தம் வழங்கப்படும் கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கையை இனி அதிகரி க்க குடிவரவு குடியகல்வு திணை க்களம் முடிவு செய்துள்ளது.

இதன்படி, இன்று முதல் குடி வரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் நாளொன்றுக்கு இரண்டு முறை நியமிக்கப்பட்டு பணிக்கு அழைக்கப்படுவார்கள்.

இதற்கமைய, காலை 7 மணி முதல் மதியம் 2 மணி வரை யிலும் மதியம் 2 மணி முதல் இரவு 10 மணி வரையிலும் திறந்திருக்கும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, இதுவரையில் அதிகபட்சமாக நாள் ஒன்றுக்கு 2,000 கடவுச்சீட்டுகள் மாத்தி ரமே வழங்கப்பட்டு வருகின்றன. எனினும், இந்த சேவையின் கீழ் இன்று முதல் இந்த எண்ணிக் கையை 3,500 ஆக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. (ம-7)

## நுவரெலியா கந்தப்பளையில்

# 8 வயது சிறுமி சடலமாக மீட்பு



(நுவரெலியா)

நுவரெலியா மாவட்டம், கந்தப்பளை - ஹைபொரஸ்ட் இலக்கம் - 01 தோட்டத்தின் தனிவீட்டுக் குடியிருப்பில் தூக்கில் தொங்கியவாறு 8 வயது சிறுமி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட சிறுமி ஹைபொரஸ்ட் இலக்கம் - 01 தோட்டப் பாடசாலையில் தரம் 3இல் கல்வி கற்கும் காவியா என அழைக் கப்படும் இராஜமாணிக்கம் விசாந்தினி என அடையாளம் காணப்பட்டுள்ளது.

வீட்டின் வாசல் பகுதியில் உள்ள கூரைக் கம்பத்தில் சேலைப்பட்டியில் கழுத்து இறுகியவாறு சிறுமி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை 8.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது எனக் ஹைபொரஸ்ட் பொலி ஸார் தெரிவித்தனர்.

சம்பவம் இடம் பெற்ற அன்று, சிறுமி தனது வீட்டுக்கு முன்பாக உள்ள முற்றத் தில் விளையாடிக் கொண்டிருந்தார் என வும், தாய் மலசலகூடத்துக்குச் சென்றி ருந்தார் எனவும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. (ம-7)


# மரண அறிவித்தல்



தோற்றம்
09 – 11 – 1940

மறைவு
13 – 06 – 2022

## ஆறுமுகம் வேலாயுதம்

திருநாவலூர் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வாணர்குடியிருப்பு புலோலி தென்மேற்கு பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வேலாயுதம் அவர்கள் நேற்று (13.06.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - நாகம்மா தம்பதியினரின் அன்புப் புத்திரனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - இராசமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் வே. பார்த்தீபன் (ஜேர்மனி), திருமதி ஸ்ரீமதி தயாபரன் (ஆசிரியை - யா/ பொலிகண்டி இ.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயகௌரி (ஜேர்மனி), சு.தயாபரன் (நில அளவையாளர் - முல்லைத்தீவு ) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் த. விகாஷ்னி, த. துஷாயினி, பா. ரிஷிகா, பா. அனிக்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற க. அபிராமசுந்தரி, ஆ. சிவானந்தன், ஆ. சிவயோகபதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற வே. சிறீஸ்கந்தராஜா (ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர் - தபால் திணைக்களம்), வே. சிறீநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), திருமதி ச. நந்தனசிகாமனி (ஓய்வு பெற்ற ஆசிரியை), செல்வி வே. மதிவதனி (ஓய்வுபெற்ற தபாலதிபர், பருத்தித்துறை), சி. தெய்வசிகாமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.06.2022) செவ்வாய்க் கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-4490)

"அன்னை இல்லம்"
வாணர்குடியிருப்பு,
புலோலி தென்மேற்கு, பருத்தித்துறை.

077 199 6770

தகவல் :-
குடும்பத்தினர்


## மருந்துக்குத் தட்டுப்பாடு

# பாம்புக் கடிக்கிலக்கான மாணவன் உயிரிழப்பு

(கொழும்பு)

பாம்புகடித்தவருக்கு வழங்கப்படும் மருந்து இல்லாததன் காரணமாக அநு ராதபுரத்தில் 16 வயது பாடசாலை மாண வன் ஒருவன் உயிரிழந்துள்ளான்

வீட்டின் முன்னால் விளையாடிக் கொண்டிருந்த 16 வயது மாணவனை பாம்பு கடித்ததை தொடர்ந்து பெற்றோர் அநுராதபுரம் போதனா வைத்திய சாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

எனினும் அங்கு பாம்புக்கடிக்கான மருந்து இருக்கவில்லை என மாண வனின் தந்தை தெரிவித்துள்ளார்.

ஒரு மருந்தை கொடுத்தனர் ஏனைய மருந்துகள் எங்கே எனக் கேட்டபோது இல்லை என தெரிவித்துவிட்டனர் மருந்து பற்றாக்குறையால் எனது மகனை இழந்து விட்டேன் என தந்தை வேதனை வெளி யிட்டுள்ளார். (ம-7)

# தந்தையைக் கட்டையால் அடித்துக் கொன்ற மகன்!

(கொழும்பு)

மகன் ஒருவர் தனது தந்தையைக் கட்டையால் அடித்துப் படுகொலை செய் துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் குருவிட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொஹர்பாவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் 66 வயதுடைய பரக [illegible] பொஹர்பாவ பகுதியைச் சேர்ந்த [illegible].

குடிபோதையில் வந்த மகன் அவரது மனைவியைத் தாக்கியுள்ளார். இதன் போது மருமகளைக் காப்பாற்ற முற்பட்ட தனது தந்தையைக் கட்டையால் அடித்து மகன் படுகொலை செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலையுடன் தொடர்புடைய 34 வயதுடைய சந்தேகநபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் குருவிட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 43 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்

# அரிசியாக்கி சந்தைக்கு விநியோகம்

## நெல் சந்தைப்படுத்தல் சபை நடவடிக்கை

**(கொழும்பு)**

**நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் உள்ள 43, 000 மெற்றிக் தொன் நெல்லை அரிசியாக்கி சந்தைக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அதன் தலைவர் நீல் டி சில்வா தெரிவித்துள்ளார்.**

இதற்கமைய சதொச, கூட்டுறவு நிலையங்கள் மற்றும் சிறப்பு அங்காடிகள் ஊடாக நிவாரண விலையில் அரிசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த நிறுவனங்களிடம் இருந்து இதற்கான முன்பதிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. சிவப்பு மற்றும் வெள்ளை கெக்குலு அரிசி ஒரு கிலோகிராம் 197 ரூபாவுக்கும், நாடு ஒரு கிலோகிராம் 199 ரூபாவுக்கும், சம்பா ஒரு கிலோகிராம் 205 ரூபாவுக்கும், கீரி சம்பா ஒரு கிலோகிராம் 215 ரூபாவுக்கும் கொள்வனவு செய்ய முடியும்



என அவர் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு குறைந்த விலையில் அத்தியாவசியப் பொருளான அரிசியை வழங்கும் வகையில் இந்த செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் நீல் டி சில்வா தெரிவித்துள்ளார். (4)

# சீனாவிலிருந்து அரிசி



(கொழும்பு)

500 மில்லியன் யுவான் மனிதாபிமான உதவியின் கீழ் சீனாவில் இருந்து முதல் தொகுதி அரிசி நாட்டுக்கு கொண்டு வரப்பட்டது

இந்த விடயம் தொடர்பாக சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தனது டுவிட்டர் கணக்கில் பதிவிட்டுள்ளார்.

இந்த மனிதாபிமான உதவியின் கீழ் சீனாவினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட மருந்துகளின் முதல் தொகுதி அண்மையில் ஹொங்கொங்கில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4)

# மனிதவள நெருக்கடியை தடுக்க

## உணவு, சுகாதாரம், கல்வி தொடர்பில் அவதானம்

## ஹனா சிங்கர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து இப்போது மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் இவ்வாண்டின் இறுதியில் இலங்கையில் பாரிய மனிதவள நெருக்கடி ஏற்படுவதைத் தடுப்பதற்காக உணவுப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய மூன்று முக்கிய துறைகள் தொடர்பில் அவதானம் செலுத்தியிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையினால் நிகழ்நிலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு இலங்கையின் நிலவரம் குறித்துத் தெளிவுபடுத்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், அதனால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள 1.7 மில்லியன் மக்களுக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்காக 47.2 மில்லியன் டொலர் நிதியைக்கோரும் செயற்றிட்டத்தை நாம் இலங்கையின் ஏனைய பங்காண்மைத்தரப்புக்களுடன் இணைந்து வெளியிட்டிருக்கின்றோம்.

அதேவேளை இவ்வாண்டின் இறுதியில் இலங்கையில் பாரிய மனிதவள நெருக்கடி ஏற்படுவதைத் தடுப்பதற்காக உணவுப்பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய மூன்று முக்கிய துறைகள் தொடர்பில் அவதானம் செலுத்தியிருக்கின்றோம். அதனை முன்னிறுத்தி உதவிச்செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்று தெரிவித்துள்ளார். (4)

# இன்று கடமைகளை பொறுப்பேற்கிறார் லிட்ரோ தலைவர்

(கொழும்பு)

லிட்ரோ நிறுவனத்தின் புதிய தலைவராக லிட்ரோ நிறுவனத்தின் முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளர் முதித பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, அவர் இன்று முதல் நிறுவனத்தின் தலைவராக கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்.

லிட்ரோ நிறுவனத்தின் முன்னாள் தலைவர் விஜித ஹேரத் அண்மையில் இராஜினாமா செய்ததையடுத்து, புதிய தலைவராக முதித பீரிஸை நியமிப்பது சரியான தருணம் என லிட்ரோவின் தொழிற்சங்கங்கள் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# பிக்கு சடலமாக மீட்பு

(கொழும்பு)

பன்சியகம பிரதேசத்தில் 31 வயதுடைய பிக்கு ஒருவர் பொறித்துப்பாக்கியால் தாக்கப்பட்டு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குருநாகலிலுள்ள நா உயன பௌத்த வன மடாலயத்திற்குரியவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பொதுவாக விலங்குகளை பயமுறுத்துவதற்கு பயன்படுத்தப்படும் பொறித்துப்பாக்கியால் தலையில் தாக்கப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பொறித்துப்பாக்கியை வைத்த சந்தேக நபர் இன்னும் அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (4)


YGC ACCELERATOR




அணி 5

ஆரம்பநிலை வர்த்தகங்களுக்கான 6 மாத விரைவுபடுத்தற் செயற்பாடு

நீங்கள் ஒரு முயற்சியாண்மையாளரா? உங்கள் ஆரம்ப நிலை வர்த்தகத்தை விரைவுபடுத்த ஆர்வமாக உள்ளீர்களா?

YGC Accelerator உங்களுக்கானது!

உங்களின் வியாபார முயற்சியின் வளர்ச்சிக்கு துணைபுரியும் ஒரு இலாப நோக்கமற்ற செயற்றிட்டமாகும்.

YGC ACCELERATOR இல் பங்கு பற்றுவதன் ஊடாக பெறக்கூடியவை
- உங்கள் வியாபாரத்திற்கென பிரத்தியேக வழிகாட்டி
- வியாபாரம் சார்ந்த நன்மைபயக்கும் வலையமைப்பை உருவாக்கும் வாய்ப்பு
- வியாபாரங்களுக்கு தேவையான வழிகாட்டல் அமர்வுகள்
- வியாபாரத்தின் ஆரம்ப நிலைக்கான நிதி
- முதலீட்டு வாய்ப்புக்கள்

(1862)

விண்ணப்பப் படிவம்

https://www.yarlithub.org/ygc-accelerator/

ஜூன் 25 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்குக!

மேலதிக விபரங்களுக்கு

www.yarlithub.org | +94 76 767 3158 | event@yarlithub.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கிந்திய தீவுகள் அணியை வீழ்த்தியது பாகிஸ்தான்



மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ஒரு நாள் போட்டியிலும் பாகிஸ்தான் அணி, 53 ஓட்டங்களால் டக்வத் லுயிஸ் முறைப்படி வெற்றிபெற்றுள்ளது.

முல்தான் மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. மழை குறுக்கிட்டதால் போட்டி 48 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்டது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 48 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள்இழப்புக்கு 269 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சதாப் கான் 86 ஓட்டங்களையும் இமாம் உல் ஹக் 62 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து 270 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 37.2 ஓவர்கள் நிறைவில் 216 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், பாகிஸ்தான் அணி, 53 ஓட்டங்களால் டக்வத் லுயிஸ் முறைப்படி வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, அகீல் ஹொசைன் 60 ஓட்டங்களையும் கார்டி 33 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சதாப்கானும், தொடரின் நாயகனாக இமாம் உல் ஹக்கும் தெரிவு செய்யப்பட்டனர். (4)

## தென்னாபிரிக்காவிற்கு எதிரான தொடரில் இந்தியா மீண்டும் தோல்வி



இந்தியக் கிரிக்கெட் அணிக்கெதிரான இருபது - 20 போட்டியில், தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்டஇருபது- 20 தொடரில் 2-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்க அணி முன்னிலைப் பெற்றுள்ளது.

கட்டாக் மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 148 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதனைத்தொடர்ந்து 149 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, 18.2 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், தென்னாபிரிக்க அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. (4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2637

**சகா**



உழைப்பவனைத் தேடி கண்டுபிடித்து இயக்கம் நடத்தினால் தான் பலனுண்டு. கிடைத்தவனைக் கொண்டு நடத்தினால் பலனில்லை

-அறிஞர் அண்ணா

**பிரபா**



உலகிலேயே அதிக எடை உள்ளது "மௌனம்"

**அக்ஷயா**



பசிக்குத் தகுந்த உணவும் பாசத்திற்கு தகுந்த உறவும் வாழ்வின் வரங்களே

**அபிஷேக்**

எல்லா இடங்களிலும் அமைதியாக இருந்து விடாதே... உன்னிடம் நியாயம் உள்ளது என்பது தெரியாமல் போய்விடும்



**வருணிகா**

மனக்குழப்பம் இருக்கும் போது மௌனமாக இருங்கள் மனக்கஷ்டம் இருக்கும் போது தைரியமாக இருங்கள்

**சாரங்கள்**



மனிதனைத் தவிர பிற உயிர்கள் தங்கள் குணங்களையும் இயல்புகளையும் ஒருபோதும் மாற்றிக் கொள்வதே இல்லை

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாடு மீள்வதற்கு 18 மாதங்கள் ஆகும் பிரதமர் ரணில்

(கொழும்பு)

**தற்போதைய நெருக்கடியிலிருந்து இலங்கை மீள்வதற்கும் பொருளாதாரம் ஸ்திரத்தன்மை வருவதற்கும் சுமார் 18 மாதங்கள் ஆகும் என பிரதமர்ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

இலங்கை தற்போது பாரிய டொலர் நெருக்கடி மற்றும் வெளிநாட்டு கடன் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் ஆனால் அதிலும் சில சிரமங்களை எதிர்கொள்வதா கவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை கூறியது போல, இலங்கை முழுக்க முழுக்க அவசர நிலையை எதிர் கொள்கிறது எனவும் தெரிவித்துள் ளார்.

ஆகவே உலக வல்லரசுகளின் ஆத ரவு இலங்கைக்கு தேவை என்பதோடு நாட்டில் உள்ள அனை த்து அரசியல் வாதிகளும் ஒன்றி ணைய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மேலும் இலங்கை மீண்டும் உயர் நடுத்தர வருமானம் பெறும் நாடாக மாற்ற, நிதி நிலை மையை உறுதி செய்வ தில் தான் கவனம் செலுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார். கூடிய விரைவில் நாட்டை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வருவதற்கு எத்தகைய தியாகத்தையும் செய்ய தயாராக இருப்பதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.(4)



# விபத்து; ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

வெல்லவாய பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். துவிச்சக்கர வண்டியொன்று எதிர்த்திசையில் வந்த உந்துருளியில் மோதியதி லேயே குறித்த விபத்து இடம்பெற்றது.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கலமொடஆர பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதான, துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபரே உயிரிழந்துள்ளார். (4)

# புத்தளத்தில் சடலம் மீட்பு

(கொழும்பு)

புத்தளம் - மதுரங்குளிப் பகுதி யில் எரிபொருள் வரிசைக்கு அருகில் உள்ள ஓடையில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள் ளது.

நேற்றுக் காலை அந்தப் பகுதியில் உள்ள பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய பொலிஸ் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

அவர் எரிபொருள் வரிசையில் காத்திருந்தவர் என தெரிவிக்கப்படுகின்ற போதிலும், அது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. (4)



# மரண அறிவித்தல்

தோற்றம் 1953 • 11 • 06



மறைவு 2022 • 06 • 12

## திருமதி.கந்தசாமி இராசம்மா

அந்திரான், நெல்லியடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.கந்தசாமி இராசம்மா அவர்கள் நேற்று முன்தினம் (12.06.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் சிலம்பு ஆழ்வார் தெய்வானையின் அன்பு மகளும், வீரகத்தி சிதம்பரன் இலட்சுமியின் அன்பு மருமகளும், சட்டத்தரணி கந்தசாமியின் பாசமிகு மனைவியும், அரவிந்தன், கவிதா, கீர்த்திகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுகந்தினி, துஷாந்தன், மயூரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஷாமினி, திரு, அரன், இளவரசன், இனியவன், யுகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், செல்லத்துரை, காலஞ்சென்ற கந்தசாமி, இராசதுரை, சிவஞானம் ஆகியோரின் ஒரே சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அந்திரான்,<br>நெல்லியடி,<br>கரவெட்டி.

தொ.பே: 021 226 3755<br>077 359 3445

தகவல்: சி.கந்தசாமி<br>(கணவர்)<br>சட்டத்தரணி.

(இ-4489)



# இராசிபலன்

14.06.2022<br>வைகாசி 31, செவ்வாய்க்கிழமை<br>பூரணை பிற்பகல் 5.53 மணிவரை

கேட்டை முன்னிரவு 7.24 மணிவரை<br>சுபநேரம் 10.23-11.53 மணிவரை<br>இராகுகாலம் 2.53-4.23 மணிவரை

சித்தாமிர்தம், பூரணை விரதம்<br>சந்திராஷ்டமம் -பரணி, கார்த்திகை

வளவன்




உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், தேவையற்ற விவாதங்களைத் தவிர்த்துக் கொள்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர் பகை மாறும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.




புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், தேவைகள் பூர்த்தியாகும் நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.




வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள்.




குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.




உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.




உறவினர் பகை மாறும், முன்னேற்றம் கூடும் நாள், குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரலாம், ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள்.




திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும் நாள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.




வருமானம் வரும் வழிவகைகளைச் செய்வீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், நன்மைகள் நடைபெறும் நாள், போசன சுகமுண்டு.




உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும், தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், கொள்கைப் பிடிப்புடன் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.




சுற்றியிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் நலனில் சிறு இடையூறுகள் ஏற்பட்டு அகலும், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

நம்பிக்கை இல்லாத இடத்தில் அன்பு இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனை நடவடிக்கை

(குருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை உத்தியோகத்தர்கள் கிளிநொச்சி மாவட்டத்தின் அரிசி ஆலைகள் மற்றும் அரிசி விற்பனை நிலையங்களில் தீடீர் சோதனை நடவடிக்கைகளை நேற்று முன்தினம் முன்னெடுத்தனர்.

இச் சோதனை நடவடிக்கையின் போது கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க கூடிய விலையினை பொறித்த அல்லது காட்சிப்படுத்திய அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் கூடிய விலையில் அரிசியை விற்பனை செய்த விற்பனையாளர்களுக்கெதிராகவும் விலைகாட்சிப்படுத்தாது அரிசி விற்பனையில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அத்தோடு எதிர்வரும் நாட்களிலும் அரிசி விற்பனை விலை தொடர்பான திடீர் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு முறைகேடுகளில் ஈடுபடும் வியாபாரிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் தெரிவித்தனர்.

மேலும் முறைகேடான வியாபார நடவடிக்கைகள் தொடர்பில் மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு முறைப்பாடு செய்யுமாறும் அல்லது பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை துரித சேவை இலக்கமான 1977 ஊடாகவும் முறைப்பாடுகளை வழங்க முடியும் என பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர். (4-6-316)

# தென்மராட்சியில் இரண்டாம் கட்டமாக லாப்ஸ் காஸ் எரிவாயு விநியோகம்



(சாவகச்சேரி)

தென்மராட்சியில் நேற்று திங்கட்கிழமை இரண்டாம் கட்டமாக லாப்ஸ் காஸ் எரிவாயு விநியோகிக்கப்பட்டது.

ஏற்கனவே முன்பதிவுகளை மேற்கொண்ட 250 பேருக்கே இவ்வாறு சாவகச்சேரியில் உள்ள லாப்ஸ் காஸ் எரிவாயு விநியோக நிறுவனத்தில் வைத்து எரிவாயு விநியோகிக்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேசத்தவர்களுக்கான அடுத்தகட்ட லாப்ஸ் காஸ் எரிவாயு முன்பதிவுகள் நாளை புதன்கிழமை சாவகச்சேரி ஆதார மருத்துவமனையை அண்மித்துள்ள லாப்ஸ் காஸ் எரிவாயு விநியோக நிறுவனத்தில் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-30)

# யார்க்கரு விநாயகர் வித்தியாலய புனர்நிர்மாண வேலைகள் ஆரம்பம்



(கரணவாய்)

யார்க்கரு விநாயகர் வித்தியாலய கட்டட திருத்த வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. 80 வருடங்களாக புனர்நிர்மாண வேலைகள் செய்யாமல் இப் பாடசாலை சிதைந்த நிலையில் காணப்பட்டு வந்தது. பாடசாலை அதிபரின் முயற்சியினால் நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் நிதி திரட்டி நிர்மாணப்பணிக்கு உதவி வருகின்றனர். (4-6-60)

# வாகனம் மீது தாக்குதல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாவகச்சேரி உதய சூரியன் கிராமத்தில் வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் மீது நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார்சைக்கிள் ஒன்றில் வந்த மூவர் குறித்த வாகனம் மீது தாக்குதல் நடத்தி விட்டு தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)



யாழ்.போதானா மருத்துவமனையின் குருதித் தேவை கருதி துர்க்கா விளையாட்டுக் கழகம் மற்றும் மக்கள் முன்னேற்றக் கழகம் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (படம் : சிவசாந்தன்)

# தாதிய உத்தியோகத்தருக்கு தொலைபேசியில் மிரட்டல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடமையாற்றும் பெண் தாதிய உத்தியோகத்தர் ஒருவருக்கு தொலைபேசி வாயிலாக இனந்தெரியாதவர் களால் மிரட்டல் விடுக்கப்பட் டிருப்பதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள் ளது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாடு மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# சாவகச்சேரியில் இரு இளைஞர்கள் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச் வீதிப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணியளவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் இரு இளைஞர்கள் தலையில் காயமடைந்துள்ளனர்.

அப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் பாண் வேண்டிக்கொண்டு நடந்து சென்ற இளைஞர்கள் மீதே மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர்கள் இரும்புக் கம்பிகளால் தாக்குதல் நடத்திவிட்டு தப்பித்துச் சென்றுள்ளனர்.

இதன்போது தலையில் காயமடைந்த கெருடாவில் மற்றும் டச் வீதியைச் சேர்ந்த 19மற்றும் 21வயதான இரு இளைஞர்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். தாக்குதல்சம்பவம்தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(4-6-30)



யாழ்ப்பாணம் நீராவியடி அருள்மிகு ஜெயநீராவி வீரகத்தி விநாயகர் கோவில் தேர்த்திருவிழா நேற்றுக் காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்: சிவசாந்தன்)



எள்ளாங்குளம் இராணுவத்தினர் 551 ஆவது படைப்பிரிவு கரணவாய் மத்தியில் அமைந்துள்ள பொன்னம்பல வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை அண்மையில் துப்பரவு செய்து பாடசாலை அதிபரிடம் கையளித்துள்ளனர். (படம்: மகாலிங்கம்)

# பெற்றோர் மாண்பு வைபவம்

(குப்பிழான்)

யாழ். இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் பெற்றோர் மாண்பு வைபவம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு மேற்படி பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி.சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-6-18)



சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளால் அண்மையில் மிருசுவில் அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் வைத்து 30 பெண் தலைமைக் குடும்பங்களுக்கு உலருணவு வழங்கி வைக்கப்பட்டது. (படம் : சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டிற்கு கிடைக்கப்பெறும் டொலர்களின் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

**கடந்த ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடும்போது, மே மாதம், வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்கள் நாட்டுக்கு அனுப்பும் தொகையில் கணிசமான அளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.**

எவ்வாறாயினும், கடந்த வருடம் (2021) மே மாதத்துடன் ஒப்பிடும்போது இந்த வருடம் மே மாதம் அனுப்பப்பட்ட பணம் மிகக் குறைவானதாகவே உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதத்தில் வெளிநாட்டில் இருக்கும் இலங்கையர்கள் அனுப்பிய தொகை 248.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.

அதேசமயம் மே மாதம் அவர்கள் அனுப்பிய பணம், 304.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

எனினும் கடந்த வருடம் மே மாதம் வெளிநாட்டில் இருக்கும் இலங்கையர்கள் நாட்டுக்கு அனுப்பிய பணம் 460.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி

(கொழும்பு)

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 44.3 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்தோடு யூரோக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 40.7 சதவிகிதமும் ஸ்டெர்லிங் பவுண்டுக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 39.8 சதவிகிதமும் வீழ்ச்சியடைந்துள்ளது.

மேலும் ஜப்பானிய யெனுக்கு எதிராக 35.1 சதவிகிதமும் அவுஸ்திரேலிய டொலருக்கு எதிராக 43.1 சதவிகிதமும் வீழ்ச்சி கண்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த 10 ஆம் திகதி இந்திய ரூபாவிற்கு எதிராக நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 41.7 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த மே மாதம் 13 ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்ட அந்நிய செலாவணி ஸ்திரப்படுத்தல் கொள்கை காரணமாக ரூபாவின் பெறுமதி சற்று ஸ்திரத்தன்மையை பெற்றுள்ளதாக மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (4)

## இந்திய பிரதமர் மோடிக்கு அவதூறு

# மின்சாரசபை தலைவர் மீது வழக்கு தொடர சஜித் முடிவு



(கொழும்பு)

இலங்கை மின்சார சபைத் தலைவருக்கு எதிராக பாராளுமன்ற சிறப்புரிமை மீறல் குற்றச்சாட்டொன்றை முன்வைக்கவுள்ளதாக சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபை தலைவர் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தொடர்பாக தெரிவித்த பொய் கருத்துக்கு எதிராகவே வழக்கு தொடுக்க இருப்பதாக சஜித் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரம் கோப் குழு விசாரணை இடம்பெற்றுள்ளது.

வடக்கின் பூநகரி பிரதேசத்தில் காற்றாலை மின் உற்பத்திக்கான அனுமதியை இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு வழங்குமாறு இந்தியப் பிரதமர் மோடி அழுத்தம் கொடுப்பதாக ஜனாதிபதி தன்னிடம் தெரிவித்தார் என்று பெர்னாண்டோ தெரிவித்திருந்தார்.

பின்னர் தான் அவ்வாறு கூறியது தவறு, களைப்பு மற்றும் மனஅழுத்தம் காரணமாக தான் அவ்வாறான பொய்த் தகவல் ஒன்றை கூறியதாகவும் அவர் மனவருத்தம் தெரிவித்திருந்தார்.

எனினும் பாராளுமன்ற குழுவொன்றின் முன்னால் பொய் உரைப்பது பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறும் பாரிய குற்றச் செயலாகும்.

அந்த வகையில் மின்சார சபைத் தலைவர் பெர்னாண்டோவுக்கு எதிராக பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறிய குற்றச்சாட்டின் கீழ் முறைப்பாடு செய்யவுள்ளதாக சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (4)


# மரண அறிவித்தல்

## திருமதி.ராஜேஸ்வரி கனகசபை



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.ராஜேஸ்வரி கனகசபை அவர்கள் 12.06.2022 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வைத்திய கலாநிதி கனகசபையின் ஆருயிர் மனைவியும் காலஞ்சென்றவராகிய சண்முகம் அம்மாகுட்டி அன்னமுத்து அவர்களின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவராகிய மார்க்கண்டு பாக்கியம் சரஸ்வதியின் மருமகளும் ஆவார். அருந்ததி, உமாசங்கர், உதயசங்கர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய தம்பையா, சின்னத்துரை, பொன்னுத்துரை, சொல்வேந்தன், காலஞ்சென்றவர்களாகிய இலட்சுமி, செல்லம்மா, சின்னம்மா, பரமேஸ்வரி மற்றும் இராசமணி, மங்கையகரசி, சரவணமுத்து, சரச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

மற்றும் காலஞ்சென்றவராகிய குணரட்ணம், அரியரட்ணம், சூரியதாஸ் மற்றும் சந்திராதேவி, கமலாதேவி, விமலாதேவி, உமாதேவி, ஜீவானந்தன், விமலதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.06.2022 இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மனல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(11865)

54, ராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.

076 986 7321
021 221 6163

தகவல்:
கணவர்-வைத்திய கலாநிதி மார்க்கண்டு கனகசபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 70

# மனிதம் இல்லையெனில் நாமும் மிருகத்திற்கே ஒப்பாவோம்



உலகப் புகழ்பெற்ற இந்தப் படம் செய்தித்தாளில் வெளிவந்த தினம் (1993). இப்படத்தை தன் புகைப்படக் கருவியில் படம்பிடித்த கெவின் கார்ட்டர் தற்கொலை செய்து கொண்டார். ஏன்?

கெவ்வின் கார்ட்டர்- உலக புகழ் பெற்ற புகைப்படக்காரர். எல்லா சிறந்த புகைப்படக்காரர்களைப் போன்றே இவருக்கும் நல்ல புகைப்படங்களை எடுக்க வேண்டுமென்ற ஆசையும் ஆர்வமும் இருந்தன. இந்த ஆர்வம் அவரை நாடு, நகரம், கிராமம், காடு, மலை என்று கொண்டு சென்றது. 1993 இல் இந்த ஆர்வம் அவரை தனது சக புகைப்படப் பத்திரிக்கையாளர்களுடன் சூடானுக்குக் கொண்டு சென்றது. அப்போது சூடான் வரலாறு காணாத பஞ்சத்தில் சிக்கித் தவித்துக் கொண்டு இருந்தது. குறிப்பாக சூடானின் தென்பகுதி மக்கள் உண்ண உணவின்றி, பருகநீரின்றி பசி, தாகத்தில் தவித்துக் கொண்டிருந்தனர்.

பசி பஞ்சத்தில் தவிக்கும் மக்களின் நிலைகளைக் புகைப்படக்கருவியில் பதிவு செய்ய கெவின் தொலைதூர கிராமங்கள் வரை சென்றிருந்தார்.

இறுதியாக அவர் முயற்சி கைகூடியது. ஒரு நாள் தன் புகைப்படக்கருவியை தோளில் தொங்க விட்டுக் கொண்டு உள்ளத்தை உலுக்கக் கூடிய படத்துக்கான காட்சியைத் தேடியலைந்து கொண்டிருந்தபோது அப்படிப்பட்ட காட்சி தென்பட்டது. பசி பஞ்சத்தால் அடிபட்ட நோஞ்சன் நிலையில் உள்ள ஒரு சிறுமி நடக்கக் கூட இயலாத நிலையில், எலும்புக் கூடு போன்ற தன்னுடலை தவழ்ந்து இழுத்துக் கொண்டு மெல்ல மெல்ல ஊர்ந்து செல்வதைக் கண்டார்.

அந்தச் சிறுமி ஐக்கிய நாடுகளின் சபையின் சார்பாக அமைக்கப்பட்டு இருந்த உணவு வழங்கும் முகாமை நோக்கி தள்ளாடியபடி தவழ்ந்து கொண்டிருந்த காட்சி உண்மையிலேயே இதயத்தைப் பிழியக் கூடியதாக இருந்தது. தோளில் இருந்து புகைப்படக்கருவியை இறக்கி கோணம் பார்த்த கெவினுக்கு இன்னொரு வியப்பும் காத்திருந்தது.

ஆம் அந்த எலும்பும் தோலுமான சிறுமிக்கு பின்னாலேயே சிறிது தொலைவில் ஒரு பிணம் தின்னிக் கழுகும் சிறுமியின் மீது பார்வையை நிலை நிறுத்திக் கொண்டு இருந்தது. எப்போது சிறுமியின் உடலை விட்டு உயிர் பிரியும் மீதியுள்ள அந்தத் தோலையும் அதைச் சுற்றி இருக்கும் சிறிது மாமிசத்தையும் எப்போது சாப்பிடலாம் எனக் காத்திருந்தது பிணம் தின்னிக்கழுகு. கெவின் புகைப்படக்கருவியின் லென்சை கண்ணுக்கு ஒத்திக் கொண்டார். சிறுமியையும் கழுகையும் ஒரு பிரேமில் அடக்கிக் கொண்டு 'க்ளிக்' செய்தார்.

இப்போது அவரது புகைப்படக்கருவியில் மிக அரிதினும் அரிதான படம் பதிவாகி விட்டது. இதை விற்றால் நல்ல விலை கிடைக்கும் என்ற மகிழ்ச்சியில் புகைப்படக்கருவியைத் தோளில் மாட்டிக் கொண்டு தனது வண்டியை ஸ்டார்ட் செய்து பறந்து விட்டார். இந்த அரிதான படத்தை 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிக்கைக்கு விற்றார். இந்தப் புகைப்படம் 1993 மார்ச் திங்கள் 26 ஆம் நாள் காலை நாளிதழில் முதல் பக்கத்தில் வெளியானது. இந்தப் படத்தைப் பார்த்ததும் ஆயிரக்கணக்கான வாசகர்கள் பத்திரிக்கை அலுவலகத்திற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டனர். அனைவரும் ஒரே கேள்வியைத்தான் கேட்டனர். புகைப்படத்தில் உள்ள சிறுமி என்ன ஆனாள்?

அவள் உயிருடன் பிழைத்தாளா அல்லது இறந்து விட்டாளா? இந்தக் கேள்விக்கான பதில் பத்திரிகையின் தொலைபேசி ஆப்ரேட்டரிடமோ படத்தை எடுத்த கெவின் கார்ட்டரிடமோ இல்லை. 1994,மே 23 அன்று பெரும்கை தட்டல்களுக்கு இடையே கெவின் கார்ட்டர் கொலம்பியப் பல்கலைக்கழகத்தின் பிரமாண்டமான அரங்கத்தில் இந்த அரிதான புகைப்படத்திற்கான 'புலிட்சர்' விருதப் பெற்றுக் கொண்டார்.

இந்த விருது புகைப்படத் துறையில் நோபல் விருதுக்கு இணையானது. விருது பெற்ற சில நாட்களுக்குப்பின் கெவின் பெரும் மன உளைச்சலுக்கு ஆளானார். கெவினுக்கும், அங்கு இருந்த பிணம்தின்னிக் கழுகுக்கும் என்ன வேற்றுமை? இரண்டும் ஒரே விதமாகத்தான் செயற்பட்டுள்ளனர். 'குறைந்தபட்சம் புகைப்பட நிபுணர் கெவின் அந்த சிறுமிக்கு ஒரு வாய் தண்ணீர் தந்து உயிரைக் காப்பாற்றி இருக்கலாம். அல்லது தனது வலுவான கைகளினால் அந்தச் சிறுமியைத் தூக்கிச் சென்று உணவளிக்கும் அமைப்பு அலுவலகத்தின் வாயிலிலாவது சேர்த்து இருக்கலாம். கல்லெடுத்து வீசி அந்தக் கழுகையாவது விரட்டி இருக்கலாம்.


ஆனால் இவற்றில் எதையும் செய்யாமல் வெறும் ஒரு படத்தை எடுத்தார். அதை அதிக விலை தந்த் பத்திரிக்கைக்கு விற்று விட்டார் என்று ஒருவர் அவர் மீது குற்றம் சாட்டியதுதான் காரணம். இரண்டு மாதங்களுக்குப் பின் கடற்கரைக்கு அருகில் அவரது கார் நின்று கொண்டிருந்தது.

அதில் அவர் பிணமாகக் கிடந்தார். கெவின் தற்கொலை செய்துகொண்டார்.

அவரது பிணத்திற்கு அருகில் காவல்துறைக்கு ஒரு கடிதம் கிடைத்தது. அதில் சில வரிகளே இருந்தன.


முதல் வரி I am Really, Really Sorry...

நாம் எவராக இருந்தாலும் சரி.
நம்மிடம் மனிதம் இல்லையெனில்
நாமும் மிருகத்திற்கே ஒப்பாவோம்...



Justi Justi

## ஆசியாவில் நீளமான தந்தங்களை கொண்ட யானை உயிரிழப்பு



(டில்லி)

இந்தியாவில் பந்திப்பூர் வனப்பகுதியில் ஆசியாவிலேயே மிக நீளமான தந்தங்களை கொண்ட காட்டு யானை உயிரிழந்துள்ளது.

குறித்த யானை "போகேஸ்வரன்", "கபினி" என பெயரிட்டு அழைக்கப்பட்டது.

ஆண் யானையான போகேஸ்வரன் மிக நீளமான தந்தங்களை உடையது. அதாவது இது, ஆசியாவிலேயே மிக நீளமான தந்தம் உடைய காட்டு யானை ஆகும். அதன் தந்தங்கள் சுமார் 7' அடி முதல் 8 அடி வரை இருக்கும்.

தும்பிக்கை போன்று தரையில் படும் அளவுக்கு அதன் தந்தங்கள் இருக்கும். (4)

# தாய்வா

# முன்



இது குறித்து சீன பாதுகாப்பு அமைச்சர் வெய் ஃபெங்க் தெரிவிக்கையில், 'பன்முகத் தன்மை என்ற போர்வையில் அமெரிக்கா தனது நாட்டின் நலன்களை பிற நாடுகளின் மீது திணிக்கிறது.

எந்த நாடும் தன் விருப்பத்தை மற்ற நாடுகள் மீது திணிக்கக்கூடாது, பிற நாடுகளை கொடுமைப்படுத்த கூடாது.

# மேலும் 46 போர்க்கப்பல்களை கடற்படையில் இணைக்கும் ரஷ்யா

(மொஸ்கோ)

ரஷ்ய கடற்படை இந்த ஆண்டில் மேலும் 46 போர்க்கப்பல்களையும் துணைக் கப்பல்களையும் தனது சேவையில் இணைக்கும் என ரஷ்ய கடற்படைத் தலைமைத் தளபதி நிகோலாய் யெவ்மெனோவ் தெரிவித்தார்.

டீசல் மற்றும் மின்சக்தியில் இயங்கக்கூடிய இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்களை ரஷ்ய கடற்படையில் இணைக்கும் நிகழ்வு ரஷ்யாவின் இரண்டாவது பெரிய நகரமான சென். பீட்டர்ஸ்பர்க்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பேசிய ரஷ்ய கடற்படைத் தலைமைத் தளபதி நிகோலாய் யெவ்மெனோவ், உலக இராணுவ-அரசியல் நிலைமைக்கு ஏற்ப ரஷ்யா வலுவான மற்றும் சீரான கடற்படையை கொண்டிருக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

ரஷ்ய கடற்படை குறைந்தபட்சம் 70 வீதம் தற்போதைய சூழலுக்குப் பதிலளிக்கக்கூடிய நவீன கப்பல்களைக் கொண்டிருக்க வேண்டும் என்ற ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் விருப்பத்தை அவர் மீண்டும் வலியுறுத்தினார். (4)

# உக்ரைனுக்கு உதவும் எலான்மஸ்க்



(கீவ்)

உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பு 100 நாட்களுக்கு மேலாக நடைபெற்று வருகிறது.

இந்தப் போரில் உக்ரைனு க்கு உதவும் வகையில் நிதி மற்றும் ஆயுத உதவிகளை மேற்கத்தேய நாடுகள் வழ ங்கி வருகின்றன.

இதேபோல் உலக பணக் காரர்களில் ஒருவரான எலான் மஸ்க்கும் போரினால் பாதிக் கப்பட்டுள்ள உக்ரைன் நாட்டிற்கு தனது ஸ்டார்லிங்க் நிறுவனம் மூலம் செயற்கைக் கோள் வழியாக இணைய சேவை களை வழங்கி வருகிறார்.

இந்நிலையில் தற்போது உக்ரைன் இராணுவம் பயன் படுத்தும் வகையில் அவர் மேலும் சில ஸ்டார்லிங் செயற்கைக்கோள் இணைய தள கருவிகளை உக்ரை னுக்கு அனுப்பியுள்ளதாக தெரிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ானுக்கு ஆயுதம் வழங்க வந்தது அமெரிக்கா



## சீனா அதிருப்தி

(பீஜிங்)

**சீனாவை எதிர்க்கும் போர்வையிலேயே தாய்வானுக்கு ஆயுதங்களை அமெரிக்கா வழங்குகிறது என சீனா குற்றஞ்சாட்டி உள்ளது.**



இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் சீனாவை எதிர்ப்பதற்காக, இந்தோ-பசுபிக் என்ற பெயரில் ஒரு சிறிய அமைப்பை அமெரிக்கா உருவாக்கும் முயற்சி, ஆசிய நாடுகள் சீனாவுக்கு தரும் ஆதரவை பறிக்கும் முயற்சியே ஆகும்.

இது மற்றவர்களைக் கட்டுப்படுத்தவும் மோதலையும் உருவாக்குவதற்கான ஒரு உத்தியாகும். சீனா தனது இராணுவத்தை விரைவாக நவீனப்படுத்தி வருகிறது. சமீபத்தில் சீனா, சாலமன் தீவுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது.

இது பசுபிக் கடற்பகுதியில் சீன கடற்படை தளம் உருவாகலாம் என்ற அச்சத்தை அமெரிக்கா உருவாக்கி, தென் சீனக் கடல் பகுதிகளில் போர்க் கப்பல்கள் மற்றும் போர் விமானங்களை நிறுத்துகிறது. இது எங்கள் பிராந்திய விவகாரங்களில் தலையிடுவதாகும். பிலிப்பைன்ஸ் மற்றும் வியட்நாம் நாடுகளுடன் சீனாவிற்கு கடல் சார்ந்த பிரச்சினை உள்ளது.

இந்த பிராந்தியத்தில் உள்ள நாடுகள் தங்கள் கடல் சார்ந்த பிரச்சினைகளை தாங்களாகவே தீர்த்து கொள்ள வேண்டும். தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்தவே சீனாவை எதிர்க்கும் போர்வையில் தாய்வானுக்கு ஆயுதங்களை வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது என கூறினார். (4)

# சீனாவுடன் நிபந்தனைகள் அற்ற நல்லுறவை பேண விரும்புகின்றோம்

## தாய்வான் பிரதமர் தெரிவிப்பு

(தாய்பே)

சீனாவுடன் நல்லுறவை பேணவே தாய்வான் விரும்புகிறது. சீனாவுக்கான கதவை மூட விரும்பவில்லை. ஆனால் சம வாய்ப்பு மற்றும் எந்தவொரு அரசியல் முன்நிபந்தனையுமற்ற உறவையே நாங்கள் எதிர்பார்க்கிறோம் என தாய்வான் பிரதமர் சாய் செங்-சாங் நேற்று முன்தினம் தெரிவித்தார்.



தாய்வான் சீனாவின் ஒரு பகுதி எனக் கூறிவரும் சீனாவுக்கும் தாய்வான் எந்தவொரு நாட்டின் பகுதியும் இல்லை.

அது இறைமை யுள்ள தனிநாடு சமத்துவம், பரஸ்பர விட்டுக்கொடுப்பு மற்றும் அரசியல் முன்நிபந்தனைகள் இல்லாதவரை சீனாவுடன் நல்லுறவில் ஈடுபட நாங்கள் தயாராக இருக்கிறோம் எனவும் தெரிவித்தார்.

சீனா தனது இராணுவ விமானங்கள், போர்க்கப்பல்களை தாய்வான் எல்லைகளுக்குள் அனுப்பி அடக்கு முறைகளை பிரயோகிப்பது நியாயமற்றது.

தாய்வான் மக்கள் மட்டுமே தங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்க முடியும். சீனாவுடன் அமைதியையே அவர்கள் விரும்புகின்றனர்.

தாக்குதல்களை மேற்கொண்டால் அவர்கள் தங்களைத் தற்காத்துக்கொள்ள எந்த எல்லைக்கும் செல்வார்கள் என சாய் செங்-சாங் மேலும் தெரிவித்தார். (4)

# பிறந்தநாள் கொண்டாடிய பண்டாக் கரடிகள்



(பீஜிங்)

தென்மேற்கு சீனாவின் சோங்கிங் நகராட்சி பகுதியில் உள்ள சோங்கிங் உயிரியல் பூங்காவில் உள்ள ஆறு பண்டா கரடிகளின் பிறந்த நாள் விழாவை பொதுமக்கள் மற்றும் பூங்கா நிர்வாகத்தினர் கோலாகலமாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

ஒரு வயதான ஜிங்சிங் மற்றும் சென்சென் ஆகியவற்றுடன் இணைந்து ஏனைய கரடிகளுக்கும் கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிறந்தநாள் விழா எடுக்கப்பட்டது.

பண்டா கரடிகளின் பிறந்தநாளை ஒட்டி உயிரியல் பூங்காவில் பண்டா கரடிகளின் வசிப்பிடம் மூங்கில் தண்டுகள், அப்பிள், தர்பூசணி மற்றும் கரட் போன்ற ஏராளமான காய், கனிகளால் அலங்கரிக்கப்பட்டது.

மேலும் அங்கு வைக்கப்பட்ட கேக்குகளை பண்டா கரடிகள் ஆர்வமுடன் உண்டு மகிழ்ந்தன.


இந்தக் காட்சிகளை உயிரியல் பூங்காவுக்கு வந்த ஏராளமான பார்வையாளர்கள் கண்டு ரசித்தனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் குருதிக் கொடையாளர் தினம் இன்று

"இரத்ததானம் செய்வது ஒற்றுமையின் செயல், இந்த உன்னதமான முயற்சியில் இணைந்து உயிர்களைக் காப்பாற்றுங்கள்"

எனும் தொனிப்பொருளில் இவ்வாண்டு உலகக் குருதிக் கொடையாளர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு நாட்டில் உலக குருதிக்கொடையாளர் தினம் சர்வதேச ரீதியாக நிகழ்வுகள் நடைபெறுவது வழமையாகும். இம்முறை மெக்சிக்கோ நாட்டில் இத்தினம் சிறப்பான முறையில் கொண்டாடப்படுகின்றது.



உயிர்களைக் காப்பாற்ற பாதுகாப்பான குருதி மற்றும் குருதிக் கூறுகளின் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த ஜூன் 14 ஆம் திகதி குருதிக் கொடையாளர் தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இத் தினம் தன்னார்வமான முறையில் முன்வந்து எவ்வித பிரதி உபகாரமும் எதிர்பார்க்காது இரத்த தானம் செய்து உயிர் காக்கும் உத்தமர்களுக்கு நன்றி கூறும் ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.

இந்த ஆண்டிற்கான தொனிப் பொருள் "இரத்ததானம் செய்வது ஒற்றுமையின் செயல். இந்த முயற்சியில் இணைந்து உயிர்களைக் காப்பாற்றுங்கள்", மேலும் தன்னார்வ குருதிக்கொடை உயிர்களைக் காப்பாற்றுவதிலும் சமூகங்களுக்குள் ஒற்றுமையை மேம்படுத்துவதிலும் பெரும் பங்கு வகிக்கின்றது.

கர்ப்பம் மற்றும் பிரசவத்துடன் தொடர்புடைய குருதிப் போக்கினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு திறம்பட சிகிச்சையளிப்பதற்கு குருதி மற்றும் குருதிக் கூறுகள் அத்தியாவசியமானது. நீண்டகால நோய்கள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக கடுமையான குருதிச் சோகையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், பெண்கள், முதியோர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு குருதி அதிகளவில் தேவைப்படுகின்றது. புற்றுநோயாளர்கள் மற்றும் எலும்பு மச்சை குறைபாடுகள், ஹீமோ குளோபின் குறைவானோர் மற்றும் நோயெதிர்ப்பு குறைபாடு நிலைகளின் பரம்பரை கோளாறுகள் கொண்ட நோயாளிகள், மருத்துவ அவசரநிலை, பேரழிவுகள் மற்றும் விபத்துகளால் பாதிக்கப்பட்டவர்கள், அத்துடன் அறுவை சிகிச்சை உட்பட்ட நோயாளிகளுக்கு இரத்தத்தின் தேவை இன்றியமையாதது.

ஆனால் தேவையான அனைவருக்கும் பாதுகாப்பான குருதி மற்றும் பாதுகாப்பான குருதிக் கூறுகள் கிடைப்பதில்லை. ஆசியாவிலுள்ள பல நாடுகளில் பாதுகாப்பான குருதியின் பற்றாக்குறை கடுமையாக நிலவுகின்றது.

வலுவான ஒற்றுமையுடன் கூடிய சமூக, கலாசார சூழ் நிலையானது ஒரு பயனுள்ள இரத்ததானம் வழங்கும் திட்டத்தின் வளர்ச்சியை எளிதாக்கும். அதேவேளையில், இரத்ததானம் சமூக உறவுகளை உருவாக்குவதற்கும் ஒரு ஐக்கிய சமூகத்தை உருவாக்குவதற்கும் பங்களிப்பு செய்கின்றது என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

கொரோனா என்னும் கொடிய உயிர்க்கொல்லி நோயால் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டுக்கொண்டிருந்த போதும் ஏனைய நோயாளர்களுக்கான சிகிச்சைகள் தொடர்ச்சியாக நடைபெற்றன. இதற்கு குருதி தேவைப்பட்டது. அப்போது குருதிக்கொடையாளர்கள் அச்சமின்றி தங்கள் பணியை தொடர்ந்து செய்தார்கள். அதனால் இரத்த வங்கியின் செயற்பாடுகள் சிறப்பான முறையில் நடைபெற்றது. நோயாளர்களுக்கு தேவையான குருதியை தட்டுப்பாடின்றி வழங்கக் கூடியதாகவிருந்தது. அதேபோல் தற்போது எமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார பிரச்சினைக்கு மத்தியிலும் குருதிக்கொடையாளர்கள் மனம் தளராது தொடர்ச்சியாக குருதிக்கொடை செய்து உயிர் காக்கும் உன்னத பணிக்கு மகத்தான சேவையாற்றி வருகின்றார்கள். அவர்களுக்கு இந் நன்னாளில் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**த.றவினதாஸ்**, பொதுச்சுகாதார பரிசோதகர்,
தேசிய குருதி மாற்று பிரயோக சேவை பிராந்திய இரத்த நிலையம்
யாழ்.போதனா மருத்துவமனை

# சிறைகளில் கொடுக்கப்படும் உணவு கைதிகளை வாழ வைக்குமா?

## அருட்தந்தை சக்திவேல் கேள்வி

(நெளுக்குளம்)

தற்போதைய சூழ்நிலையில் சிறைச்சாலைகளில் கொடுக்கப்படும் உணவு அவர்களை வாழ வைக்குமா? என சிந்திக்க வைத்துள்ளதாக அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குள் அரசியல் கைதிகளுக்கான அடிப்படை தேவைகள் சரியான முறையில் கிடைக்கின்றனவா? என தொடர்பு கொண்டு வினவிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கடந்த மாதம் 9 ஆம் திகதி காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் சூத்திரதாரிகளில் ஒருவரான முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பொலிஸில் சரணடைந்த விதமும் அதே வேகத்தில் பிணையில் வெளியே வந்த முறைமையும் பல வருடங்களாக பிணையின்றி சிறையில் வாடும் அரசியல் கைதிகளுக்கும் ஏனைய கைதிகளுக்கும் மட்டுமல்ல பொதுமக்களுக்கும் ஏற்றுக்கொள்ள முடியாத நிகழ்வாகவே உள்ளது.

தற்போதைய நாட்டின் பொருளாதார நிலையில் "பொது மக்கள் இரண்டு வேளை உணவு உண்பதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும்" என தற்போதைய பிரதமர் அறிவித்தல் விடுத்துள்ளார். இதற்கு முன்னமே அடிமட்ட மக்கள் இரண்டு வேளை அல்லது ஒரு வேளை உணவு மட்டுமே உண்டு அரை வயிற்று உணவோடு வாழ்வு போராட்டம் நடத்துகின்றனர்.

ஏற்கனவே சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு போதுமான மற்றும் போசாக்கான உணவு கொடுக்கப்படுவதில்லை என கைதிகளே விசனம் தெரிவித்துள்ளதையும் மறக்க முடியாது.

தற்போது உணவுப் பற்றாக்குறையோடு நாட்டில் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகின்ற சூழ் நிலையில் நீண்ட நாள் சிறையில் வாடும் அரசியல் கைதிகள்



நோயில் தள்ளப்படுவது தண்டனையாகவே கொள்ளல் வேண்டும். அரசியல் கைதிகள் நீதிமன்றத்தால் குற்றவாளிகள் எனக் குறிப்பிட்டு தண்டனை அளிக்கும் முன்னர் போசனைத் தரம் குறைந்த உணவின் காரணமாக நோய்களுக்கு உள்ளாவதற்கு இடமளிக்கக் கூடாது.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பிணையில் வந்ததை போன்று, சட்டத்தின் முன் யாவரும் சமமாக மதிக்கப்பட்டு நாட்டின் பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு நீண்ட நாட்களாக சிறையில் வாழும் அனைத்து அரசியல் கைதிகளும் வெளியில் செல்லக் கூடிய நிலையிலுள்ள ஏனைய கைதிகளும் அவரவர் குடும்பத்தோடு சேர்ந்து வாழ இடமளிக்கப்பட வேண்டும் என தெரிவித்தார். (4-6-299)

# கிளிநொச்சியில் அரியவகை நட்சத்திர ஆமை மீட்பு



(முறிகண்டி)

கிளிநொச்சியில் அரிய வகை நட்சத்திர ஆமை ஒன்று மீட்கப்பட்டு வன ஜீவராசிகள் திணைக்களத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மயில்வாகனபுரம் பகுதியில் விவசாயி ஒருவர் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொழுது குறித்த அரிய வகை ஆமை அடையாளம் காணப்பட்டது. குறித்த பிரதேசத்தில் காணப்படும் ஆமை இனங்களிடமிருந்து வேறுபட்டமையால் குறித்த ஆமை தொடர்பில் இணையத்தளத்தில் தேடியுள்ளனர். குறித்த ஆமையானது அருகிவரும் நட்சத்திர ஆமை வகையைச் சேர்ந்தது என அவர்கள் அடையாளம் கண்டதை அடுத்து அதனை பாதுகாக்கும் நோக்குடன் வன ஜீவராசிகள் திணைக்களத்தினரை அழைத்து அவர்களிடம் குறித்த ஆமையை பாதுகாப்பாக கையளித்தனர்.

குறித்த ஆமையானது இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் நாட்டிற்கு உருத்துடையவைகள் எனவும் கடத்தப்பட்டு விற்பனை செய்யப்படும் அரிய வகையான ஆமை இனம் எனவும் தெரிய வருகின்றது.

ஒரு நட்சத்திர ஆமையின் விலை 500 டொலரிலிருந்து 2 ஆயிரம் டொலர் வரை சர்வதேச சந்தையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (4)

# மன்னார் மருத்துவமனை நோயாளர் விடுதியில் கத்திக்குத்து சம்பவம்

## ஒருவர் கைது

(மன்னார்)

மன்னார் மருத்துவமனை நோயாளர் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த மன்னார் நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் மீது கத்திக்குத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை ஒரு மணியளவிலேயே குறித்த கத்திக் குத்து சம்பவம் இடம்பெற்றது.

குறித்த சம்பவம் தொடர்பில் மருத்துவமனை விடுதியில் தங்கியிருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

அண்மையில் நொச்சிக்குளம் பகுதியில் இரு சகோதரர்கள் வாள்வெட்டு தாக்குதலில் பலியாகிய நிலையில் நள்ளிரவில் நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கத்திக் குத்துக்கு இழக்காகியுள்ளமை மன்னார் மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (4-6-289)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூரியா உரத்துடன் ஓமானிலிருந்து ஜூலை மாதம் வருகிறது கப்பல்

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

**இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வழங்குவதாக உறுதிய ளிக்கப்பட்ட யூரியா உரக் கப்பல் ஜூலை 10 அல்லது 11 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைய உள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

5,000 மெற்றிக் தொன் யூரியாவை ஏற்றிவரும் கப்பல் ஜூன் 28 ஆம் திகதி ஓமானில் இருந்து புறப்படத் திட்டமிட ப்பட்டுள்ளதாகத் தெரிவித்த மகிந்த அமரவீர, ஜூலை 15 ஆம் திகதி முதல் விவசாயி களுக்கு உரங்களை விநியோ கிக்க முடியும் என்றார்.

உர செயலகம், வர்த்தக உர நிறுவனம் மற்றும் சிலோன் உர நிறுவனம் ஊடாக யூரியா இருப்பு கமநல சேவை நிலையங்களுக்கு விநியோகிக்கப்படும். நெல் மற்றும் மக்காச் சோள விவசாயிகளுக்கு யால பருவத்தில் உரங்கள் வழங்க ப்படும் என அமைச்சர் தெரிவி த்தார். (4)

# 5 ஆயிரம் கிலோ சுறா சிக்கியது

(திருமலை)

கிண்ணியாவில் மீனவர் களின் வலையில் 5000 கிலோ கிராம் எடை மதிக் கத்தக்க சுறா மீன் ஒன்று சிக்கியுள் ளது.

குறித்த சுறா மீன் நேற்று முன்தினம் கிண்ணியா கடற்பரப்பில் மீனவர்க ளுக்கு சிக்கியு ள்ளதாக தெரிய வருகிறது. இதனை மீனவர்கள் கரைக்கு பெரும் சிரமத்திற்கு மத்தியில் கொண்டு சேர்த்ததாக தெரி விக்கப்படுகிறது. (4)

## மக்களே அவதானம் !

# வரிசையில் நிற்பவர்களை இலக்கு வைத்து மோசடி

(கொழும்பு)

எரிபொருள் தட்டுப்பாட் டுக்கு மத்தியில், வரிசையில் காத்திருப்போரை இலக்கு வைத்து சிலர் மோசடியில் ஈடுபட்டு வருவதாக பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

தாம் எரிபொருளை பெற் றுத்தருவதாகக் கூறி வரிசை யில் காத்திருப்பவர்களிடம் பணத்தை பெற்று சிலர் மோசடியில் ஈடுபட்டு வரு வதாக குறிப்பிடப்படுகின் றது.

எனவே, குறித்த வர்த்தக த்தில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் மக்கள் அவ தானமாக இருக்குமாறும் அவர்கள் குறித்த தகவல்கள் அறிந்திருப்பின் தமக்கு அறி யப்படுத்துமாறும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4)

# 'கோட்டா கோ கம' வில் பயிர்ச் செய்கை ஆரம்பம்

(கொழும்பு)

காலிமுகத்திடல் - கோட்டா கோ கம போராட்டக்களத்தில் புதிய அம்சமாக பயிர்ச்செய்கை வலயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 9 ஆம் திகதி காலிமுகத்திடல் அருகே ஆரம் பிக்கப்பட்ட கோட்டா கோ கம போராட்டக்களம் நாளுக்கு நாள் புதுப்புது அம்சங்களுடன் மெரு கூட்டப்பட்டு வருகின்றது.

கோட்டா கோ கமவில் தற் போதைக்கு நூலகம், மருத் துவ சிகிச்சைக்கூடம், கல ந்துரையாடல் மண்டபம், ஓவி யக்கூடம், உயர்கல்வி வகு ப்புகள், வானொலி நிலையம், இணைய வசதிகளுக்கான நிலையம் உள்ளிட்ட ஏராள மான அம்சங்கள் உருவாக் கப்பட்டு ஒரு நவீன கிராம த்தின் மாதிரியாக கோட்டா கோ கம காணப்படுகின்றது. அந்த வகையில் தற்போது கோட்டா கோ கிராமத்தில் பயிர்ச் செய்கை வலயம் ஒன்றும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. போராட்டக்காரர்கள் தங்கியிருக்கும் தற்காலிக கொட் டகைகளின் அருகே ஒவ்வொ ருவரும் சிறு அளவிலேனும் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் வகையில் ஊக்குவிக்கப்படு கின்றனர். (4)

# ஆடை வாங்கினால் அரிசி இலவசம்



(கொழும்பு)

பத்தாயிரம் ரூபாய் அல்லது அதற்கு மேல் ஆடை அல்லது பொருட் களை வாங்கினால் ஐந்து கிலோ அரிசியை வழங் குவதற்கு நாட்டின் பிரபல ஆடை நிறுவனம் ஒன்று ஏற்பாடு செய்துள்ளது.

மேலும், 5,000 ரூபாய் அல்லது அதற்கு மேல் மதி ப்புள்ள ஆடை அல்லது பொரு ட்களை வாங்கினால், சுப்பர் மார்க்கெட்டில் பொரு ட்கள் கொள்வனவு செய் யும் வகையில் வவுச்சர்கள் வழங்கும் நடவடிக்கை களும் ஆரம்பிக்கப்பட்டு ள்ளன.

ஏற்கனவே 10,000 ரூபா வுக்கு ஆடை வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு, பைகள், குடை, உணவுப் பாத்திரங்கள் உட்பட பரிசுப் பொருட்களை முன்பெல் லாம் இந்த ஆடை நிறுவனங்கள் வழங்கி வந்தமை தமை குறிப்பிடத் தக்கது. (4)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 240 | 350 |
| உருளைக்கிழங்கு | 240 | 240 | 280 |
| பச்சைமிளகாய் | 450 | 500 | 550 |
| தக்காளி | 800 | 700 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 150 | 140 |
| கோவா | 350 | 350 | 360 |
| கரட் | 200 | 380 | 420 |
| பூசணி | 140 | 140 | 160 |
| புடோல் | 250 | 240 | 280 |
| வாழைக்காய் | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 450 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 240 |
| பாகற்காய் | 650 | 600 | 600 |
| வெண்டைக்காய் | 250 | 160 | 350 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 160 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 200 | 280 | 320 |
| பீற்றூட் | 360 | 350 | 400 |
| கறிமிளகாய் | 350 | 400 | 520 |
| முருங்கைக்காய் | 1200 | 800 | 1400 |
| போஞ்சி | 800 | 700 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 320 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 120 |
| தேசிக்காய் | 600 | 400 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 160 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 600 | 400 | 600 |
| முள்ளங்கி | 200 | 240 | 250 |
| பொன்னாங்கண்ணி | 60 | 70 | 80 |
| வல்லாரை | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | 80 | 100 | 160 |

# சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் பெறுவது எளிதானது அல்ல

## ஹர்ஷ டி சில்வா

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத் திடம் (IMF) கடனைப் பெறுவ தற்கு இலங்கை இந்த வருட இறுதி வரை காத்திருக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கடன் மறுசீரமைப்பு செயற் பாடு இலகுவானதல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் குறித்து மேலும் தெரிவித்துள்ள அவர், "சர்வ தேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் பெற இந்த ஆண்டு இறுதிவரை காத்திரு க்க வேண்டும்.

கடன் குறித்த பேச்சுவார் த்தை முடிந்ததும் ஊழியர்கள் நிலை ஒப்பந்தத்தில் கையெ ழுத்திடுவார்கள். அநேகமாக அதற்கு இன்னும் ஒரு மாதம் ஆகலாம்.

ஆனால் அந்த ஒப்பந்தத்தில் இருந்து பணம் பெற முடியாது. பணத்தைப் பெறுவதற்கு சர்வ தேச நாணய நிதியத்தின் ஒப் புதல் தேவை. அதைச் செய்ய நிறைய வேலைகள் தேவைப் படும். அதாவது நிதி நிர்வாகத் தில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். எளிமையாகச் சொன்னால், அரசின் வரு வாயை அதிகரிக்க வேண்டும். செலவைக் குறைக்க வேண் டும்.

மானியங்கள் பற்றி சிந் திக்க வேண்டும். எல்லாவற்றி ற்கும் மேலாக அந்தக் கடன் களை மறுசீரமைக்கும் ஒரு நேர்மறையான திட்டத்திற்கு நாம் செல்ல வேண்டும். அது எளிதானது அல்ல என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(நேற்றைய தொடர்ச்சி)

## அம்புலிமாமா

# சண்டைக்குப் பரிசு!





அதனால் தான் அவர்களுக்கு அன்னம் சொன்னதில் முழு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது.

கறுப்புத் திருடன் அந்த அறைக்குள் போனதும் அன்னம் சட்டென அந்த அறைக் கதவை மூடி வெளியே பூட்டி விட்டாள்.

பிறகு தன் கணவனின் கட்டுகளை அவிழ்த்து விட்டாள். இதற்குள் விடிந்தும் விட்டது. அப்போது அன்னம் "இரண்டு திருடர்களும் அகப்பட்டார்கள். ஒருவன் இங்கே அறையில் அடைபட்டுக் கிடக்கிறான்.

இன்னொருவன் கிணற்றுள் இருக்கிறான். அவன் மேலே வர முடியாதபடி கயிற்றை முனையிலிருந்து அவிழ்த்து விட்டேன்" என்றாள். ஆதிமூலம் "பேஷ் நம் சாதாரண போட்டாபோட்டி எவ்வளவு உபயோகமாக இருந்தது பார்த்தாயா? அதற்காகத்தான் முதலில் நான் ஆரம்பித்தேன். நீயும் புரிந்து கொண்டு விட்டாய். இல்லாத நகைப் பெட்டிகளை இருப்பதாகக் கூறி அவர்களை நம்ப வைத்துப் பிடித்து விட்டோம். இனி காவலாளியிடம் சொல்லி அரசாங்கத்திடம் அவர்களை ஒப்படைப்போம்" என்றான்.

காலையானதும் காவல் வீரர்கள் வந்து இரண்டு திருடர்களையும் பிடித்துக் கொண்டு போனார்கள். அவர்கள் பெயர் பெற்ற திருடர்கள். பல திருட்டுகளை நடத்தியவர்கள். அவர்களைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு பரிசு கூட அளிப்பதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆதிமூலம் பரிசு தனக்கே என்றான். அன்னமோ "அதெல்லாம் இல்லை. நான் தான் அவர்களைப் பிடித்தேன். எனவே எனக்குத் தான் பரிசு கிடைக்க வேண்டும்" என்றாள்.

கிராம அதிகாரியோ "நீங்கள் இருவரும் சண்டை போட்டுக் கொண்டே திருடர்களைப் பிடித்துக் கொடுத்தீர்கள். கிடைக்கப் போகும் பரிசிற்காக சண்டை போடாமல் இருங்களேன்" என்றார்,

அங்கு கூடிய ஊராரும் "நன்றாகச் சொன்னீர்கள்" என்று கூறிக் கை தட்டிச் சிரித்தனர்.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## யுத்த காண்டம்



"அதுவே அறம்; ஆண்மையும், மேன்மையும் ஆகும்" என்றான். இராமன் தெளிவான உரைக்கு எதிர் சொல்ல முடியாமல் போய்விட்டது; அதனை ஆணையாக ஏற்றுச் செயற்பட்டனர். சுக்கிரீவன், தானே வீடணனைச் சார்ந்தான்; அவனை வாழ வைக்க வரவேற்று அழைத்துச் சென்றான்.

இராமன் அவனை ஏற்றுக்கொண்டான்; "இலங்கைச் செல்வம் உனது; நீண்ட காலம் சிறப்புற ஆண்டு நிலைத்து வாழ்க" என்று வரமும், வாழ்த்தும் கூறினான்.

ஆட்சி கிடைத்ததற்கு வீடணன், அகம் மகிழ்ந்தான்; மாட்சிமை நிரம்பிய இராமன் திருவடிகளில் விழுந்து தொழுது அவன் நல்லாசிகளைப் பெற்றான். "தசரதன் மக்கள் நால்வர் நாங்கள்; குகனோடும் சேர்ந்து ஐவரானோம் சுக்கிரீவனோடு அறுவர் ஆனோம்; இப்பொழுது உன்னோடு சேர்ந்து எழுவராகிறோம்" என்று தன் உடன்பிறப்பாக அவனை இராமன் ஏற்றுக் கொண்டான். தலைமையனை விட்டுப் பிரிந்தவனுக்குத் தங்க மடம் கிடைத்தது; மாற்றுத் தலைமையன் கிடைத்தான்; தோட்டத்துச் செடிகளைப் பிடுங்கி வேறு இடத்தில் நட்டால் சில செடிகள் பிழைத்துக் கொள்ளும்; கொடி [illegible] தேடிப் படரும்; இதுவும் ஒரு மாற்றுச் சிகிச்சையாய் அமைந்தது அவனுக்கு; உறவை முறித்துக் கொண்ட அவனுக்குப் புது உறவு கிட்டியது; இழப்பு ஈடு செய்யப்பட்டது.

படைத் தலைமைக்கு ஏற்கனவே இருந்த சுக்கிரீவனோடு வீடணனையும் சேர்த்தான் இராமன், இராம இலக்குவராய் அவர்களை மாற்றிவிட்டான்; அவர்கள் இரட்டையர் ஆயினர்; வீடணன் படைத் தலைமை ஏற்று அவர்களை ஊக்குவித்தான், உற்சாகப்படுத்தினான்.

வாழ்த்தும் தொழிலையுடைய வானவர் சமயம் பார்த்துக் கொண்டிருந்தனர்; "வீடணன் பெற்ற வெற்றியும் பெரு வாழ்வும் உலகில் யாரும் பெற்றிலர்" என்று அவனைப் பாராட்டி வாழ்த்தினர். கட்சி மாறும் அரசியல்வாதிகளுக்கு அவன் முன்னோடியாய் விளங்கினான்; சரித்திரப் புகழ்பெற்ற சாதனை மனிதனாய்க் காணப்பட்டான்; உறவு கொண்டவனை விட்டுக் கொள்கை கண்டவனிடம் அரண் தேடிச் சரண் அடைந்துள்ளான். "இது சரியா தவறா" என்பதற்கு இதுவரை முன்னுரை கூறினார்களே தவிர முடிவுரை கூறியதாய்த் தெரியவில்லை.

### கடலைக் கடக்கும் வழிவகை

நெருப்பிடையே நிழலைக் காண்பது போலப் பகைவரிடையே ஒரு நண்பனை, வீடணனை இராமன் கண்டான். அவனிடம் இலங்கையின் இயற்கையைப் பற்றியும் இறை மாட்சியைப் பற்றியும் கேட்டு அறிந்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல காரியங்களைச் செய்ய ஒருபோதும் பயப்படாதீர்கள்! தாமதமின்றி உடனே நல்ல காரியங்களைச் செய்யுங்கள்!

– நெப்போலியன் ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நடக்கப்போகும் பேரவலத்தின் அறிகுறிகளே கொலையும் கொள்ளையும்

நாடு சீரழிந்துவிட்டது. இனி பட்டினிச்சாவு பற்றிய அறிவிப்புக்காக மட்டுமே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காத்திருக்கிறார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமாச் செய்தாலாவது உலக நாடுகள் ஏதேனும் உதவி செய்யும்.

ஆனால் அந்தப் பேச்சுக்கே இடமில்லை என்பதுபோல ஜனாதிபதி கோட்டாவின் போக்கு இருக்கிறது.

சரி அவர்தான் விடாப்பிடியாக நின்றாலும் அவரின் சகோதரர்கள், உறவுகள், நண்பர்கள் நிலைமையை எடுத்துக்கூறி, பட்டினிச்சாவை நாடு எதிர்கொள்ளும் ஆபத்து நெருங்குகிறது. இனியும் நீங்கள் ஜனாதிபதிப் பதவியில் இருப்பது நல்லதல்ல. நாட்டைக் காப்பாற்ற பதவி விலகுங்கள் என்று கூறுவார்கள் என்றால் அதுவும் இல்லை.

மாறாக, மக்கள் புரட்சி வெடித்து ஆட்சியாளர்களை அகற்றும் என்றால் அதற்கும் ரணில் விக்கிரமசிங்க உலை வைத்துவிட்டார்.

உண்மை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகச் சிங்கள மக்கள் மேற்கொண்ட மாபெரும் போராட்டம் வெற்றிதர இருந்தவேளையில், பிரதமர் பதவியைப் பொறுப்பெடுத்து மக்களின் போராட்டத்தை அப்படியே மழுங்கடிக்கச் செய்து நாட்டை படுகுழியில் தள்ளிவிட்ட பாதகத்தை ரணில் விக்கிரமசிங்க செய்து விட்டார் என்ற பேச்சே இன்றைய பேசுபடுபொருளாகியுள்ளது.

நிலைமை இதுவாக இருக்க, நாட்டின் சமகால நிகழ்வுகள் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் பேரவலத்தை சுட்டி நிற்கின்றன.

எனினும் அதுபற்றி மக்கள் கருசனையற்றவர்களாக இருக்கின்றனர்.

இந்நிலையில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், எரிவாயு என்பவற்றை அறவே பெற்றுக்கொள்ள முடியாதெனும்போது நாடு முற்றுமுழுதாக ஸ்தம்பிதமடைவது தவிர்க்க முடியாததே.

நாட்டின் இந்நிலைமையானது மிகப்பெரிய அவலத்தை – பஞ்சத்தை – பட்டினிச்சாவைத் தரப்போகிறது.

ஆயினும் இந்நிலைமை ஏற்பட்டாலும் உலக நாடுகள் நம்மைத் திரும்பிப் பார்க்கப் போவதில்லை என்பதுதான் உண்மை.

அப்படியானால் மக்களை எப்படிக் காப்பாற்றுவது? பஞ்சத்தினின்றும் நாட்டை எங்ஙனம் மீட்பது? என்று ஆட்சித் தரப்பு ஆராயுமாக இருந்தால், அதற்கான ஒரேவழி புலம்பெயர் தமிழ் மக்களிடம் உதவி கோருவதாகவே இருக்கும்.

அவ்வாறு தமிழ் மக்களிடம் உதவி கோருவதற்கு முன்னதாக தமிழ் மக்களின் உரிமையை வழங்குவது அவசியமாகிறது.

ஆக, தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதன் மூலம் புலம்பெயர் தமிழ் மக்களின் உதவியைப் பெற்று நாட்டை மீளவும் தூக்கி நிறுத்த முடியும்.

இருந்தும் அதனைச் செய்வதற்கு இந்த நாட்டின் பேரினவாத ஆட்சியாளர்களும் பௌத்த பீடங்களும் தயாராக இல்லை.

ஆம், பொருளாதார நெருக்கடியால் நாட்டில் ஏற்படப்போகும் பேரவலத்தை உணராத பேரினவாதிகளின் கர்வம், இருக்கக்கூடிய சந்தர்ப்பங்களையும் பரிநாசம் செய்கிறது.

இந்நிலையில் இனி இலங்கையில் கொலைகளும் கொள்ளையடிப்புகளும் அத்துமீறல்களும் கட்டுப்பாடில் நடந்தாகும்.

இதற்கு மன்னார், வவுனியா, மல்லாவி, கொழும்பு ஆகிய இடங்களில் இடம்பெற்ற கொலைகள் அறிகுறிகளாகும்.

## தியத்தலாவையில் ஆலங்கட்டி மழை

(கொழும்பு)

தியத்தலாவை பகுதியில் ஆலங்கட்டி மழை பெய்துள்ளது.

நாட்டில் பெய்த கன மழை காரணமாக ஆலங்கட்டிகள் விழுந்த சம்பவங்கள் இதற்கு முன்னரும் பல தடவைகள் பதிவாகியுள்ளன.

அவ்வாறான மற்றுமொரு சம்பவம் நேற்று பண்டாரவளை தியத்தலாவ பிரதேசத்தில் இருந்து பதிவாகியுள்ளது.

பல இடங்களில் பலத்த மழையுடன் பனிக் கட்டிகள் தரையில் விழுவது கமராவில் பதிவாகியுள்ளது. (ம-7)

## நான் வன்முறையை ஆதரிப்பவன் இல்லை

### பிரதமருக்கு சாணக்கியன் கடிதம்

(கொழும்பு)

நான் ஒருபோதும் வன்முறையை ஆதரித்ததில்லை, ஊக்குவித்ததில்லை அல்லது வன்முறையை தூண்டக்கூடிய சிந்தனைகளிற்கு ஆதரவளித்ததில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் பிரதமர் சாணக்கியன் குறித்து பாராளுமன்றத்தில் விடுத்த அறிக்கைக்கு பதிலளித்து பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் சாணக்கியன் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமைதி, ஐக்கியம், அனைவரையும் உள்ளடக்குதல் ஆகியவற்றை வலியுறுத்தி வரும் அதேவேளை மக்களின் தேவைகள் அபிலாசைகள் குறித்து நான் குரல் கொடுத்து வருகின்றேன் என சாணக்கியன் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தாங்கள் தெரிவு செய்த பிரதிநிதிகள் தங்கள் தேவைகளை, துயரங்களை, அபிலாசைகளை கருத்தில் எடுக்க தவறிவிட்டனர் என கருதிய தன் காரணமாகவே மக்கள் வன்முறையில் ஈடுபட்டனர் என்றே நான் தெரிவித்தேன. நான் வன்முறைகளிற்கு ஆதரவளிக்கின்றேன் என்ற விதத்தில் எனது கருத்து தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது-தவறாக அர்த்தப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## பஸிலின் பதவி விலகலுக்கு பின்னால் பாரிய திட்டம்

### வாசுதேவ நாயணக்கார தெரிவிப்பு

பஸில் ராஜபக்ஷவின் பதவி விலகலுக்குப் பின்னால் பாரிய திட்டம் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பிளவுபடுவதை தடுப்பதும், அக்கட்சியின் மூலம் அரசாங்கத்தை வழிநடத்துவதும் பஸில் ராஜபக்ஷவின் திட்டம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தம்மிக்க பெரேரா தனது நிறுவனத்தில் இருந்து இராஜினாமா செய்த போதிலும் அவர் தனது உரிமைகளை விட்டுக்கொடுக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## மென் மதுபானங்களுக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

பதிவு செய்யப்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் மென் மதுபானம் வழங்குவதற்கான பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதாக அமைச்சர் ஹரின் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் கணக்கில் பதிவு ஒன்றை பதிவிட்டு அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது சுற்றுலாவை மேம்படுத்தவும் நாட்டிற்கும் அனைத்து சுற்றுலாப் பங்குதாரர் களுக்கும் வெளிநாட்டு வருவாயைக் கொண்டு வரவும் உதவும் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## காதலியின் மரணத்தை தாங்க முடியாத காதலன்

### உயிரை மாய்க்க முயற்சி

(கரணவாய்)

காதலி தற்கொலை செய்து கொண்டதை தாங்கமுடியாத காதலனும் தற்கொலைக்கு முயன்ற நிலையில் காப்பாற்றப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த 19 வயது யுவதி ஒருவர் வலிகாமம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை காதலித்து வந்துள்ளார்.

இக் காதலுக்கு காதலியின் பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்ததை தொடர்ந்து குறித்த பெண் தற்கொலைக்கு முயன்ற நிலையில் கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா நேற்று திங்கட்கிழமை யாழ். போதனா வைத்தியசாலைக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டார். இதன்போது காதலுக்கு பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்ததால் காதலி சில மாத்திரைகளையும் அலரி விதையையும் உட்கொண்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் காதலியன் இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியாத வலிகாமம் பகுதியை சேர்ந்த காதலனும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தற்கொலைக்கு முயன்ற நிலையில் காப்பாற்றப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,60)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### உடம்பின் அற்புதமான ஆற்றல்

❖ இந்திரியங்கள் வசப்பட்டால், எல்லா உணர்ச்சிகளையும் செயல்களையும் யோகியால் கட்டுப்படுத்த முடியும். உடம்பு முழுவதுமே அவனது கட்டுப்பாட்டில் இருக்கும்.

❖ அந்த நிலையில் மட்டுமே ஒருவன் தான் பிறந்ததற்காக மகிழ்ச்சி அடையத் தொடங்குகிறான். \நான் மனிதனாகப் பிறந்தது பெரும்பேறு| என்று அப்போது தான் ஒருவன் உண்மையாகக் கூற முடியும். இந்திரியங்களை இவ்வாறு அடக்கும் ஆற்றல் பெற்று விட்டால், ஒருவனுக்கு இந்த உடம்பு எவ்வளவு அற்புதமானது என்பதை உணர்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 06

1240 இல் மங்கோலிய படையெடுப்புகளின் போது முற்றிலும் அழிக்கப்பட்ட இந் நகரம், பல நூற்றாண்டுகளாக அதன் செல்வாக்கை இழந்திருந்தது. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ரஷ்ய பேரரசின் தொழிற்றுறை புரட்சியின் போது நகரம் மீண்டும் செழித்தெழுந்தது. 1918 ஆம் ஆண்டில், உக்ரைனிய மக்கள் குடியரசு சோவியத் ரஷ்யாவிடம் இருந்து சுதந்திரம் அறிவித்த பிறகு, கீவ் உக்ரைனின் தலைநகரானது.

இரண்டாம் உலகப் போரின் போது கீவ் நகரம் கைப்பற்றப்படாவிட்டாலும் கிட்டத்தட்ட முற்றிலும் அழிக்கப்பட்டது. ஆனால் போருக்குப் பிந்தைய ஆண்டுகளில் விரைவாக மீட்கப்பட்டது. சோவியத் ஒன்றியத்தின் மூன்றாவது பெரிய நகரமாக இருந்த கீவ் 1991 இல் சோவியத் ஒன்றியத்தின் சரிவைத் தொடர்ந்து, சுதந்திர உக்ரைனின் தலைநகராக மாறியது.

போர்களின் பூமி என்று அழைக்கப்படும் உக்ரைன் தொழில் புரட்சிக்குப் பின் ரஷ்யாவின் ஒரு பகுதியாகவே இருந்துள்ளது. கி.பி. ஆயிரமாம் ஆண்டுகளின் தொடக்கத்தில், கீவியன் ரஸ் என்ற பேரரசு உக்ரைனை ஆட்சி செய்தது.

தற்போதைய தலைநகரின் கீவ் என்ற பெயர் அதனால் வந்ததே. தற்போதைய பெலாரஸ், போலந்து மற்றும் ரஷ்யாவின் பல பகுதிகளை உள்ளடக்கியதாக அப்போதைய (9 ஆம் நூற்றாண்டில்) உக்ரைனை ஆட்சி செய்த கீவியன் பேரரசு இருந்தது. விளாடிமிர் தி கிரேட், அந்தப் பேரரசின் புகழ்பெற்ற அரசர். 11 ஆம் நூற்றாண்டில் கீவன் ரஸ் யாரோஸ்லாவ் தி வைஸ் (பெரும் இளவரசர் 1019-1054) கீழ் அது உச்சத்தை அடைந்தது. கீவ் கிழக்கு ஐரோப்பாவின் தலைமை அரசியல் மற்றும் கலாசார மையமாக மாறியது.

(குறிப்பு- உக்ரைனின் தலைநகரம் கீவ் ஐரோப்பாவின் பழைமையான நகரங்களில் ஒன்றாகும், இது கி.பி. 482 இல் நிறுவப்பட்டது. மொஸ்கோ கி.பி. 1147 இல் நிறுவப்பட்டது. எனவே, கீவ் மொஸ்கோவை விட 665 ஆண்டுகள் பழைமையானது. ஹைபத்தியன் வரலாற்றில் (Hypatian Chronicle) உக்ரைன் குறிக்கப்பட்டிருந்த காலத்தில் மொஸ்கோ மற்றும் ரஷ்யா பற்றி யாரும் கேள்விப்பட்டிருக்கவில்லை.)

1237-40 ஆண்டுகளில் மங்கோலியர்கள் ரஷ்ய இடங்களை ஆக்கிரமித்து, பல நகரங்களை அழித்து, கீவன் ரஸின் அதிகாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்தனர். மங்கோலிய படையெடுப்பாளர்கள் கோல்டன் ஹோர்டின் பேரரசை **(The empire of the Golden Horde)** நிறுவினர்.





ஆதிக்கம் செலுத்திய போலந்து, ரோமுடன் இணைந்து உக்ரைனில் கிரேக்க-கத்தோலிக்க அல்லது ஐக்கிய தேவாலயத்தை நிறுவியது.

உக்ரைனின் மற்ற பகுதிகள் பெரும்பாலும் ஆர்த்தடாக்ஸ் (Orthodox) ஆக இருந்தது. 1648-1657 இல் போலந்து ஆட்சிக்கு எதிரான கோசாக் எழுச்சி ஹெட்மனேட்டை நிறுவியது.

கீவ்வில் உள்ள சுதந்திர சதுக்கம்






1227 இல் மங்கோலிய பழங்குடித் தலைவர் செங்கிஸ் கானின் மரணத்தின் போது அவரது பேரரசு நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது, ஒவ்வொன்றும் அவரது சந்ததியினரால் ஆளப்பட்டது. அவை ஒவ்வொன்றும் ஒரு கானேற் எனப்பட்டது.

உக்ரைன் அதன் சுதந்திரத்தைத் தொடர்ந்து, தன்னை ஒரு நடுநிலை நாடாக அறிவித்துக் கொண்டது. அதன்பின் ரஷ்யா மற்றும் பிற சுதந்திர நாடுகளின் கொமன்வெல்த் (CIS) நாடுகளுடன் ஒரு வரையறுக்கப்பட்ட இராணுவ கூட்டாண்மையை உருவாக்கியது. அதேநேரத்தில் 1994 இல் நேட்டோவுடன் ஒரு கூட்டாண்மையை நிறுவியது.

### உக்ரைனின் வரலாற்றுச் சுருக்கம்

இன்றைய உக்ரைன் பிரதேசத்தில் கி.மு. 32,000 முதல் குடியேற்றம் இருந்து வருகிறது. இடைக்காலப் பகுதியில், இது கிழக்கு சிலாவிக் பண்பாட்டின் முக்கிய மையமாக இருந்தது.

கூவ் உருசு என்ற பழங்குடிக் கூட்டமைப்பு உக்ரைனிய அடையாளத்தின் அடிப்படையை உருவாக்கியது.

1349-1430 இல் போலந்து, லிதுவேனியா, ஆஸ்திரியா, இம்பீரியல் ரஷ்ய மன்னர்கள் சேர்ந்து உக்ரைனை பங்கு பிரித்துக் கொண்டனர். இதில் பெரும்பகுதி போலந்து வசமாகின. போலந்து 1441 இல் கிரிமியன் கானேட் கோல்டன் ஹோர்டில் (Golden Horde) இருந்து தற்போதைய தெற்கு உக்ரைனின் பெரும்பகுதியைக் கைப்பற்றியது. 1596 இல் மேற்கு உக்ரைனில்




இது நவீன சுதந்திர அரசின் முன்னோடியாக உக்ரைனில் கருதப்படுகிறது.

ஹெட்மனேட் (Hetmanate) என்பது ஹெட்மேனால் (Hetman) ஆளப்படும் ஒரு அரசியல் அமைப்பாகும். Hetmanate I Cossack Hetmanate என்றும் அழைக்கலாம், 1649 முதல் 1775 வரை உக்ரைனின் மத்திய மற்றும் வடகிழக்கு பகுதிகளில் உள்ள ஒரு கோசாக் மாநிலத்தில் ஹெட்மனேட் ஆட்சி இருந்தது.

1654 - பெரேயாஸ்லாவ்ல் உடன்படிக்கை (Treaty of Pereyaslavl) ஹெட்மனேட்டை ரஷ்யாவின் அடிமையாக மாற்றும் செயல்முறையைத் தொடங்கியது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சார சபை...

இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி பெர்டினாண்டோ பதவி விலகியுள்ளார்.

இராஜினாமா கடிதத்தை தான் ஏற்றுக்கொண்டதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை மின்சார சபையின் புதிய தலைவராக இலங்கை மின்சார சபையின் முன்னாள் பிரதித் தலைவர் நலிந்த இளங்கோன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பெர்டினாண்டோ அண்மையில் மன்னார் காற்றாலை சம்பந்தமாக சர்ச்சைக் கருத்தை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ராஜபக்ஷ...

இது தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"மே 9ஆம் திகதி பிரதமர் பதவியிலிருந்து மகிந்த ராஜபக்ஷ விலகினார் என்றும், ஜூன் 09ஆம் திகதி தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து பஷில் ராஜபக்ஷ விலகினார் என்றும், எனவே ஜூலை 09ஆம் திகதி ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகக்கூடும் என்றும், ராஜபக்ஷக்களின் அரசியல் முடிவுக்கு வருகின்றது என்றும் சமூக ஊடகங்களில் சில பதிவுகளைப் பார்த்தேன். சிறியவர்கள் மட்டுமல்ல பெரியவர்கள் கூட இந்தப் பதிவுகளை இட்டுள்ளனர்.

இவ்வாறு பதிவுகளை இடுவோர் ஒன்றை மாத்திரம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, ராஜபக்ஷக்கள் தத்தமது சுயவிருப்பத்தின் பிரகாரம் பதவிகளிலிருந்து விலகலாம்.

ஆனால், அவர்களின் அரசியலுக்கு ஒருபோதும் முற்றுப்புள்ளி வைக்க முடியாது. ராஜபக்ஷக்களின் அரசியல் பயணம் தொடரும். அந்தப் பயணத்தை எவரும் தடுத்துநிறுத்த முடியாது என்றார். (ம-7)

## தீக்காயத்துக்...

டானியல் நற்குணராணி (வயது-67) என்ற மூதாட்டியே உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் வசித்து வந்தார். இந் நிலையில் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் அவர் தீயிட்டு தற்கொலை செய்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7, 104)

## மன்னாரில்...

விலைக்கு அதிகமாக அரிசி விற்பனை மேற்கொண்ட வியாபாரிகள் மீது நேற்று வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது

மன்னார் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் பொலிஸார் இணைந்து முன்னெடுத்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது அரிசியின் நிர்ணய விலை காட்சிப்படுத்தாது அரிசி விற்பனையில் ஈடுபட்டமை, நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக அரிசி விற்பனை செய்தவர்கள் மற்றும் அரிசியை பதுக்கி வைத்த சில வர்த்தகர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக வெள்ளை நாடு 220 ரூபாய்க்கும் சிவப்புப்பச்சை 210 ரூபாய்க்கும் சம்பா 230 ரூபாய்க்கும் வெள்ளைப் பச்சை 220 ரூபாய்க்கும் விற்பனை செய்யும்படி அரசாங்கத்தினால் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த விலையைவிட அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது ஒரு லட்சம் தொடக்கம் ஐந்து லட்சம் வரை அபராதமும் மொத்த வியாபார நிலையங்களுக்கு ஐந்து லட்சம் தொடக்கம் ஐம்பது லட்சம் வரை அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. (ம-7,285)

## அட்டை முறை...

முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

கறுப்புச் சந்தைகளில் பெற்றோல் விற்பனையை தடைசெய்து பாவனையாளர்கள் தட்டுப்பாடின்றி பெற்றோல் விநியோகத்தை மேற்கொள்ள அட்டைகளைப் பயன்படுத்துவதாக தெரிவித்துள்ளார்.

இருப்பினும் நேற்றைய தினம் சிலர் அட்டையை பெற்றுக் கொள்ளாமல் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு வருகை தந்துள்ளனர்.

அவர்களை திருப்பி அனுப்பாமல் மோட்டார் சைக்கிளுக்கு 500 ரூபாய்க்கும், முச்சக்கரவண்டிகளுக்கு ஆயிரம் ரூபாய்க்கும் காருக்கு இரண்டாயிரம் ரூபாய்க்கும் வழங்குவதோடு வாகன இலக்கத்தை பதிவு செய்து அடுத்த முறை அட்டையின்றி வழங்கப்படமாட்டாது எனத் தெரிவித்துள்ளார். (ம-7,60)

## சீனா - அமெரி...

பில் நேற்று இடம்பெற்றது.

சீனத் தூதரகத்தில் நட்பு ரீதியாக இச்சந்திப்பு இடம்பெற்றதாகவும் பரஸ்பரம் ஆர்வமுள்ள விடயங்கள் தொடர்பாக இருவரும் கலந்துரையாடியதாகவும் இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வரும் இலங்கைக்கு சீனாவும் அமெரிக்காவும் இணைந்து உதவலாம் என இந்தச் சந்திப்பு குறித்து சீனத் தூதரகம் வெளியிட்ட டுவிட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## இலங்கையில்...

பேரவையின் 50ஆவது அமர்வில் உரையாற்றும்போது இது குறித்து தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

சில உலக நாடுகளில் பொருளாதார மற்றும் பிற நெருக்கடிகள் காரணமாக மனித உரிமைகள் மீதான கவலைக்குரிய விளைவுகளை நாங்கள் எதிர்கொள்கின்றோம்.

இலங்கையில் பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ள மக்களிற்கான நிவாரணத்தை வழங்கி உதவி செய்யுமாறும், மீள் எழுச்சி திட்டங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகளின் போது சமூகப் பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்குமாறும் நான் இலங்கை அரசாங்கத்தை கேட்டுக் கொள்கின்றேன்.

நிர்வாகத்தில் அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும் ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதற்கும் அனைத்து சமூகங்களிற்கும் நல்லிணக்கம், நீதியை முன்னெடுப்பதற்கும் ஆழமான கட்டமைப்பு சீர்திருத்தங்களில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-7)

## இலங்கையின்...

தொலைபேசியில் உறுதியளித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்த பின்னர் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கும் இலங்கையில் முதலீட்டை ஊக்குவிப்பதற்கும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஆன்டனி பிளிங்கன் உறுதியளித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை அமெரிக்க இராஜாங்க செயலாளருடன் தொலைபேசியில் உரையாடினார். இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளின் தற்போதைய நிலை குறித்து தொலைபேசி உரையாடலின்போது பிரதமர் விளக்கினார்.

அமெரிக்காவுடன் நெருக்கமாகச் செயற்படுவதற்கும் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கும் இலங்கை விரும்புவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்க அரச தலைவர் ஜோ பைடனுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஆன்டனி பிளின்கனிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

தன நிதானய
திகதி - 2022.06.13
சீட்டிழுப்பு இலக்கம் - 815
X 02 09 40 72

மஹஜன சம்பத
திகதி 2022/06/13
சீட்டிழுப்பு இலக்கம் 4785
C 3 0 3 8 2 1
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.06.13
சீட்டிழுப்பு இலக்கம் 094
விருச்சிகம் 21 34 40 48 விருச்சிகம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 13/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1133
S 09 02 12 20 52

கொவிசெத
திகதி 2022.06.13
சீட்டிழுப்பு இலக்கம் 3027
M 42 57 59 64
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 13/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1263
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 7 7 5 3 4 9
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1760
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2022.06.13
தினம் திங்கட்கிழமை
T 42 50 54 60
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 2,318,860/-

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.06.13
சீட்டிழுப்பு இல : 3921
வர்ணம் : நீலம்
ரூ. 4,291,240/-
வெற்றி இலக்கங்கள்
17 18 61 62 D

ராசி
சுப்பர் ஜக்பொட்
ரூ. 2,903,021.20
திகதி 2022-06-13
வெற்றி வாரம் 3472
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள்
02 08 22 51
ரிஷபம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 7,752,420/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 05 01 19 50 72
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 242,169,415/-
936
2022.06.13
திங்கட்கிழமை
Web : www.dlb.lk

அத கோடிபதி
ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல : 1586
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2022.06.13
ரூ. 4,284,180/-
வெற்றி இலக்கங்கள்
09 22 42 54 E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி-திருச்சி இடையில் மீண்டும் விமான சேவை

## அமைச்சரவையும் அனுமதி

யாழ்ப்பாணத்திற்கும் பாண்டிச்சேரிக்கும் இடையில் பயணிகள் மற்றும் சரக்கு படகுகளை போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கும், பலாலி - திருச்சி விமான நிலையங்களுக்கு இடையிலான விமான சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்குமான சாதகமான முடிவுகள் நேற்று நடைபெற்ற அமைச்சரவையில் எடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில், விரைவில் குறித்த போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இதனூடாக மண்ணெண்ணை, டீசல் போன்ற எரிபொருட்களையும் உரம், பால்மா, மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களையும் தேவையானளவு பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். (ம-7)

## 21ஆவது சட்ட...

கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

"இதனையடுத்து உத்தேச திருத்தம் கடந்த வாரம் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட நிலையில் மேலும் திருத்தங்களை அறிமுகப்படுத்த அமைச்சரவை தீர்மானம் மேற்கொண்டது.

இதன்படி, நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ 21ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்ட வரைபை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## புலம்பெயர்...

ஜெனிவாவில் நேற்று நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 50ஆவது அமர்விலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைய வாரங்களில் இலங்கை எதிர்கொள்ளும் பாரதூரமான சமூக மற்றும் பொருளாதார நிலைமையை சர்வதேச சமூகம் உணர்ந்துள்ளது. தொற்றுநோய் உள்ளிட்ட உலகளாவிய நெருக்கடிகளால் இந்த நிலைமை மோசமாகிவிட்டாலும், போராட்டங்களின் கவனம் பொருளாதார நிவாரணம் மற்றும் நிறுவன சீர்திருத்தத்திற்கான கோரிக்கைகளை உள்ளடக்கியது.

இந்தச் சவால்களை அங்கீகரித்து, அனைவரையும் உள்ளடக்கிய முறையில் முன்னோக்கிச் செல்வதில், நமது மக்களின் அனைத்துப் பிரிவுகளின், குறிப்பாக, இளைஞர்களின் அபிலாஷைகளுக்கு செவிசாய்ப்பது மிகவும் முக்கியமானதாக நாங்கள் கருதுகிறோம்.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்தின் தேவை, பாராளுமன்றம், சுயாதீன நிறுவனங்கள் மற்றும் நிறைவேற்று அதிகாரங்களின் மீதான சரிபார்ப்பு மற்றும் சமநிலை ஆகியவற்றில் உள்ள அடிப்படை ஜனநாயக விழுமியங்களை ஒருங்கிணைப்பதற்காக, அனைத்துக் கட்சிகளின் ஒருமித்த கருத்தை உருவாக்குவதில் நாங்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம்.

கருத்து வேறுபாடுகள் அமைதியானதாகவும், ஜனநாயக வெளிக்குள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும் நாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

அண்மைய இடையூறுகளின் போது, சட்டம் மற்றும் பொது ஒழுங்கைப் பேணுதல் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை தடையின்றி விநியோகிக்க அனுமதிக்கும் ஒரே நோக்கத்திற்காக வரையறுக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு மற்றும் அவசரகால விதிமுறைகள் விதிக்கப்பட்டன.

மே 9ஆம் திகதி நடைபெற்ற சம்பவங்கள் மற்றும் அதன் பின்விளைவுகள் தொடர்பாக முழு அளவிலான விசாரணைகள், சட்டமா அதிபரின் முன்மாதிரி மற்றும் நேரடியான நீதித்துறை மேற்பார்வையின் கீழ் நடைபெற்று வருகின்றன.

பொருளாதாரத்தின் முக்கிய அம்சத்தில், நிலைமையை உறுதிப்படுத்தவும், மக்களுக்கு அத்தியாவசியமானவற்றை வழங்கவும், சர்வதேச நாணய நிதிய ஆதரவுத் திட்டத்திற்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படும் உறுதியான நடவடிக்கைகளை நாங்கள் உருவாக்குகின்றோம்.

இந்த ஆண்டு மார்ச் மாதம் 49ஆவது அமர்வு உட்பட, இலங்கை தொடர்பாக எழுப்பப்பட்ட தொடர்ச்சியான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் கடந்த ஆண்டுகளில் நாங்கள் சபையுடன் தொடர்பு கொண்டுள்ளோம்.

கடந்த கூட்டத்தின் பின்னர், பயங்கரவாதத் தடைச் சட்டம் திருத்தப்படும் என மனித உரிமைப் பேரவையில் நான் உறுதியளித்த பின்னர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான சட்டத்தை பாராளுமன்றத்தில் முன்வைத்து, அது நிறைவேற்றப்பட்டது.

இந்தத் திருத்தங்களின் ஒட்டுமொத்த விளைவு, தற்போதுள்ள சட்டத்தில் கணிசமான முன்னேற்றத்தையும், ஆழமான தாக்கத்தையும் ஏற்படுத்துவதோடு, இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் மனித சுதந்திரங்களுக்கான காரணத்தை மேலும் அதிகரிக்கும்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரணைகளை மேற்கொள்வதில் உரிய நடைமுறையைப் பின்பற்றுமாறும், மிகவும் அவசியமான சந்தர்ப்பங்களில் மட்டுமே பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துமாறும் சட்ட நடைமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கு பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதில் அதன் ஆணையைத் தொடர்ந்தது.

நிலையான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக, நிலையான அபிவிருத்தி இலக்கு 16 உட்பட இலங்கை கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

புலம்பெயர் சமூகத்துடனும், எமது நாட்டின் நல்வாழ்வுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் சிவில் சமூக அமைப்புக்களுடனும் ஈடுபடுவதற்கு இலங்கை திறந்த நிலையில் உள்ளது.

மனித உரிமைகள் ஆணையத்தின் 46/1 தீர்மானத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட வெளிப்புற சாட்சியங்கள் சேகரிப்புப் பொறிமுறையை இலங்கை நிராகரிப்பதனை கடந்த காலத்தில் நான் தெளிவுபடுத்தினேன்.

இலங்கையானது பலதரப்புக் கட்டமைப்பில் பங்குபற்றுவதுடன், எமது மக்களுக்கு நீதி மற்றும் சமத்துவத்துடன் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் சர்வதேச சமூகத்துடனும் மனித உரிமைகள் பேரவையுடனும் நெருங்கிய ஈடுபாட்டை இலங்கை தொடர்கின்றது.

இன்று நாம் எதிர்கொள்ளும் இக்கட்டான சூழ்நிலையும், நமது இளைஞர்களின் குரல்களும், இந்த சவால்களை நாம் பணிவுடன் எதிர் கொள்ள வேண்டும் என்பதை உடனடியாக எமக்கு நினைவூட்டுகின்றன.

சவால்களை அதிகமாகவோ அல்லது ஒடுக்கப்படாமலோ அங்கீகரிப்பதே எமது அணுகுமுறையாகும். ஒரு தெளிவான நோக்கத்துடன், அதை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகள் குறித்த தெளிவு மற்றும் கடந்த காலத்தில் இந்த தேசத்திற்கு சிறப்பாக சேவையாற்றிய எமது மக்களின் மீள்தன்மையின் மீதான நம்பிக்கையுடன், படிப்படியாக, ஒரு சிக்கலான பயணத்தைத் தொடங்குகின்றோம்.

ஏராளமான அளவில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சர்வதேச சமூகத்தின் நீடித்த நல்லெண்ணம் மற்றும் ஆதரவால் நாங்கள் பெரிதும் பலப்படுத்தப்பட்டுள்ளோம் என்பதுடன், தொடர்ந்தும் வெளிப்படையான ஈடுபாட்டை எதிர் பார்க்கின்றோம் என்று தெரிவித்துள்ளார். (ம-7)





**காணி 6 வருட குத்தகைக்கு**

இல. 461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் ( ஆரியகுளச் சந்திக்கு அருகில், புகையிரத நிலையத்திற்கு நேர் எதிராக, ஆயுர்வேத கல்லூரி முன்பு இயங்கிய ) 9 பரப்பு 10.7 குழி விஸ்தீரணமுடைய காணியும் கட்டடமும் 6 வருட குத்தகைக்கு வழங்கப்படும். (11869)

**075 041 2552**

**மணமகன் தேவை**

யாழ். இந்து, 1991, மூலம் 1ஆம் பாதம், கிரகபாவம் 39 1/4, செவ்வாய் 6இல். அரச பணிபுரியும் மணமகளுக்கு தகுந்த வரன் தேவை. (11871)

**077 616 1739**


**33ஆம் நாள் நினைவு**



அமரர்
**நீக்கிலாப்பிள்ளை பத்திநாதர்**
[ மந்திரி ]

( கே.கே.எஸ், சீமெந்து தொழிற்சாலை ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர், ஓய்வுபெற்ற மின்னியல் இலத்திரனியல் என்ஜினியர் )

" உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான். "

மண்ணில் : 07.08.1941
விண்ணில் : 13.05.2022

கனால் வீதி, 077 082 7349 குடும்பத்தினர் (11866)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.